விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 031 வள்ளுவர் ஆண்டு 2057 தை 05 திங்கட்கிழமை (19.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
16 EDITION
JITF 2026
16th JAFFNA INTERNATIONAL TRADE FAIR
JANUARY ஜனவரி
23 24 25
10.00மு.ப - 8.00பி.ப
Muttraweli Grounds முற்றவெளி மைதானம்
இன்னும் 4 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

### திருமலைக் கோட்டைப் பிள்ளையார்
## ஆலயத்தில் கட்டுமானங்களை மேற்கொள்வது சட்டவிரோதமாம்!

(திருகோணமலை)

திருகோணமலை பிரட்ரிக்கோட்டை வாயிலில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் முன்னெடுக்கப்படும் கட்டுமானப் பணிகள் சட்டவிரோத மானவை எனத் தெரிவித்து திரு கோணமலை பொலிஸ் தலைமை யகத்தில் முறைப்பாடளிக்கப்பட் டுள்ளது.

இலஞ்ச ஊழல் எதிர்ப்பு குடிமக் கள் சக்தி இயக்கத்தின் சார்பில் குறித்த சங்கத்

15ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீலங்கா ரெலிக்கொம் பெயரில் தொலைபேசி வழி மோசடி
### குறிவைக்கப்படுகிறது வடக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உள்ளடங்கலாக வடக்கின் பல்வேறு பகுதிகளையும் குறி வைத்து தொலைபேசி மூல மான மோசடிகள் அதிகரித்துள் ளன.

தொலைபேசி மோசடிகள் பெரும் பாலானவை கையடக்கத் தொலை பேசி மற்றும் நவீன தொலைபேசி கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், இம்முறை மோசடி யாளர்கள் நிலையான தொலை பேசி பாவனையாளர்களைக் குறி

15ஆம் பக்கம் பார்க்க

### முச்சக்கரவண்டி விபத்து
## மூதாட்டி உயிரிழப்பு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பகுதியில் இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் மூதாட்டி ஒரு வர் உயிரிழந்துள்ளார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன் பாக நேற்று (18) ஞாயிற்றுக்கிழமை இந்த விபத்து சம்பவித்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

### - வன்னியில் நடந்த இறுதி யுத்தம் -
# பாலியல் வன்கொடுமைகள் உண்மையில் நடந்துள்ளன
### உறுதி செய்து அறிக்கை வெளியிட்டது ஐ.நா

(ஜெனிவா)

வன்னிப் பெரு நிலப்பரப்பில் இடம் பெற்ற குற்றங்களில் பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட மீறல் கள் உண்மையிலேயே நிகழ்ந்திருக்கின்றன என்ற உண்மை ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் புதிய அறிக்கை மூலம் நிரூபணமாகியுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். - கொழும்பு
## புகையிரத சேவைகள் இன்றுடன் ஸ்தம்பிதம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை முதல் கொழும்பு கோட்டை வரையிலான ரயில் சேவைகள் தண்டவாளத் திருத்தப் பணிகள் காரணமாக இன்று (19) திங்கட்கிழமை முதல் தற்காலிகமாகத்

15ஆம் பக்கம் பார்க்க

### அரசியலமைப்பு தொடர்பில் கலந்தாய்வு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை உருவாக்கும் செயல்முறை தொடர்பாக சட்ட அறிஞர் கள், பிரதமர், எதிர்கட்சித் தலைவர், நீதி அமைச்சர், உள்ளிட்ட அமைச்சர்கள் பங்கேற்கும் அரசு சாரா நிறு வனங்களின் பிரதிநிதிகள்

02ஆம் பக்கம் பார்க்க

### டித்வா புயலால் பாதிக்கப்பட்ட
## மூவாயிரம் மாணவர்களுக்கு நிவாரணக் கொடுப்பனவுகள்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட டித்வா புயலால் பாதிக்கப்பட்ட பாட சாலை மாணவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங் கப்படும் கல்வி உதவிக் கொடுப்பனவு முழுமையாக வழங்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிர பாத் சந்திரகீர்த்தி தெரிவித் துள்ளார்.

பேரிடரால் பாடசாலை கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட 3,000 மாண

02ஆம் பக்கம் பார்க்க

## டித்வா தாக்கத்தை ஆராய இலங்கை வருகிறது ஐ.எம்.எப்

(கொழும்பு)

இலங்கையை அண்மை யில் தாக்கிய டித்வா சூறா வளியால் ஏற்பட்ட பாதிப்பு களை நேரில் ஆராய்வதற் காக, சர்வதேச நாணய நிதி யத்தின் விசேட தூதுக் குழு ஒன்று எதிர்வரும் புதன்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்ய வுள்ளது.

இது சாதாரண விஜய மாக மட்டுமன்றி, நாட்டின் எதிர்காலப் பொருளாதார சீர திருத்தங்களை தீர்மானிக் கும் ஒரு முக்கிய நகர்வா கப் பார்க்கப்படுகிறது.

எனவே இந்த விஜயம்

02ஆம் பக்கம் பார்க்க

## வாகனங்களில் அலங்காரம் வருகிறது தடைச் சட்டம்

(கொழும்பு)

ஆபத்து விளைவிக்கக் கூடிய மேலதிக பாகங்கள் பொருத்தப்பட்டு தேவை யற்ற அலங்கார மாற்றங் கள் செய்யப்பட்ட பேருந்து கள், முச்சக்கரவண்டிகள் மற்றும் ஏனைய வாகனங் கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படு மென பொலிஸார் எச்சரித் துள்ளனர்.

இவ்வாறான வாகனங் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வாகன பரிசோதகர் களிடமிருந்து உத்தியோக பூர்வ தடை உத்தரவுகள்

15ஆம் பக்கம் பார்க்க

## குறைகேள் அரங்கு



6ஆம் பக்கம் பார்க்க

## வல்லைப் பாலத்தருகே பயணித்த கார் விபத்து
### மூவர் படுகாயம்



15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாலியல்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின்கீழ் இயங்கிவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டுவந்த இலங்கையில் மோதல்களின்போது இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பான பொறுப்புக்கூறல் பற்றிய "நாங்கள் அனைத்தையும் இழந்துவிட்டோம் - நீதி கிட்டும் என்ற நம்பிக்கையைக்கூட இழந்துவிட்டோம்" எனும் தலைப்பிலான 30 பக்க விரிவான அறிக்கை கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆயுதமோதலின் போதும், அதன் பின்னரும் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறைகள் வெறுமனே தற்செயலாக அங்கொன்றும், இங்கொன்றுமாக இடம்பெற்ற சம்பவங்கள் அல்ல எனவும், மாறாக அவை வேண்டுமென்றே பரந்துபட்ட ரீதியில் நிகழ்த்தப்பட்ட - முறையாகக் கட்டமைக்கப்பட்ட வன்முறைகளின் ஓரங்கமாகும் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி இம்மீறல்கள் தகவல்களைத் திரட்டுவதற்கும், மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கும், தனிநபர்கள் மற்றும் சமூகங்களை ஒடுக்குவதற்கும், பரவலான அச்ச மற்றும் அவமான உணர்வை வேரூன்றச் செய்வதற்குமான ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஐ.நாவின் இப்புதிய அறிக்கையைத் தாம் பெரிதும் வரவேற்பதாகவும், உலகளாவிய ரீதியில் பல்வேறு மனித உரிமை மீறல் நெருக்கடிகள் தலைதூக்கியிருக்கும் சூழ்நிலையில், தமது பிரச்சினைகளை ஐ.நா மறந்துவிட்டது எனக் கருதியிருந்த வேளையில், இவ்வறிக்கை வெளியானது தமக்கு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளிப்பதாகவும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் ஆ.லீலாதேவி தெரிவித்தார்.

"இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட மிகமோசமான அக்கிரமங்கள் இடம்பெற்றதாக நாம் கூறிய போது, அவ்வாறான சம்பவங்கள் நிகழவில்லை எனப் பலரும் மறுத்து வந்தார்கள். ஆனால் இப்போது ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையின் மூலம் நாம் கூறிய அனைத்து விடயங்களும் உண்மை என்பது நிரூபணமாகியிருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை இந்த அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு அடுத்தகட்டமாக எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்கப்போகிறோம்? இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், சர்வதேச மக்கள் தீர்ப்பாயம், சர்வதேச நீதிமன்றம் போன்ற கட்டமைப்புக்களின் முன்னிலையில் பாரப்படுத்தப்போகிறோமா? அதனை எவ்வாறு செய்வது? என்பன தொடர்பில் ஆராயவேண்டும் எனவும் குறிப்பிட்ட அவர்,

இந்த ஆராய்வு செயன்முறை குறித்தவொரு தரப்பினருக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்படக்கூடாது என்றும், மாறாக அதில் பாதிக்கப்பட்ட தரப்பினர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத்தலைவர்கள் என சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் உள்வாங்கப்படவேண்டும் என்றும் கூறியுள்ளார். (ந-7)


## வீட்டு வேலையாளர் தேவை

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள வீடு ஒன்றிற்கு, வீட்டுச் சமையலுக்கு உதவுதல், வீட்டு வேலைகள் மற்றும் ஆண் முதியவர் ஒருவரைப் பராமரிக்க பணியாளர் உடன் தேவை.

(1956)

தொடர்பு : 078 900 8006


## டித்வா...

உண்மையைக் கண்டறியும் பணி என சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களப் பணிப்பாளர் ஜூலி கோசாக் குறிப்பிட்டுள்ளார்.

உலக வங்கியின் ஆரம்ப அறிக்கையின்படி, சுமார் 4.1 பில்லியன் டொலர் நேரடி சேதம் ஏற்பட்டுள்ளதாக கணிக்கப்பட்டுள்ள நிலையில், சூறாவளியால் உட்கட்டமைப்பு, விவசாயம் மற்றும் வாழ்வாதாரங்களுக்கு ஏற்பட்ட சேதங்களின் அளவை விரிவாக மதிப்பீடு செய்யும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்தின் குறித்த சிறப்புக் குழு இலங்கை வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## மூவாயிரம்...

வர்களுக்கு15,000 ரூபா வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் தற்போது கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகளை அதிகாரிகள் மீளாய்வு செய்து வருவதாகவும், புயலால் சேதமடைந்த வீடுகளைச் சுத்தம் செய்தல் மற்றும் மீட்டெடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட 25,000 ரூபாய் மானியத்தையும் அரசாங்கம் வழங்கியுள்ளது என்றார்.

அனைத்துக் கொடுப்பனவுகளும் தற்போது முடிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தத் திட்டம் தொடர்பான மேலும் முறையீடுகளும் மதிப்பீட்டில் உள்ளன. வீடுகளை இழந்து தற்போது தற்காலிக வாடகை வீட்டில் வசிக்கும் குடும்பங்களுக்கு மாதாந்த வாடகை உதவி வழங்க அரசாங்கம் இப்போது நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ந-7)

## அரசியலமைப்பு...

குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட முதற்கட்ட கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது. (ந-7)




## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் சிறிய மற்றும் நடுத்தர வேலைகளுக்கான ஒப்பந்தம் - 2026

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அடியார்களின் நன்மை கருதியும் கிராம மக்களின் நன்மை கருதியும் இதன் கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கூறுவிலைகள் பொருத்தமான ஒப்பந்தகாரரிடமிருந்து வரவேற்கப்படுகிறது. இதற்கான மீளப்பெற முடியாத விண்ணப்பக்கட்டணம் ரூபா 1000/= செலுத்தப்படல் வேண்டும். ஒப்பந்த வேலைகளுக்கான விண்ணப்பப் படிவத்தையும் நிபந்தனைகளையும் ஆலய அலுவலக நேரத்தில் (மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப4.30மணி வரை) அலுவலகத்திற்கு வந்து ஆலய தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் 30.01.2026ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளலாம். கூறுவிலைக்கான விண்ணப்ப இறுதித்திகதி 10.02.2026 ஆம் திகதி ஆகும்.

### வேலை விபரம்

01. நயினாதீவு வல்லிக்காட்டில் உள்ள அடியார்கள் நீராடும் கேணியை புனரமைத்து சுற்றுமறைப்பு மதில்வேலை.
02. சுகாதாரத் திணைக்கள அறிவுறுத்தலுக்கு அமைய தினசரி அன்னதான மண்டப சமையல் கூடத்தைத் திருத்தி அமைத்தல்.
03. நயினாதீவு வல்லிக்காடு ஐயனார் கோவிலுக்கு அண்மித்ததாகவுள்ள முன்பு வெட்டப்பட்ட அடியார்கள் நீராடும் கேணியை ஆழமாக்கி வெள்ளக்கல் பதித்தல். (வெள்ளக்கல் எம்மால் தரப்படும்)
04. ஆலயத்திற்கு சொந்தமான நீர்வேலியில் உள்ள காணிக்கு தூண்வேலி அமைத்தலும், சிறிய களஞ்சிய அறை, மலசலகூடம் அமைத்தலும்.
05. ஆலய உள்வீதியில் 1008 சங்கு பீடத்தைச்சுற்றி வெள்ளிரும்பு பைப்பினால் அழகான சுற்றுவேலியும் கூரையும் அமைத்தல்.
06. நயினாதீவு 06ஆம் வட்டாரத்தில் வேலணை பிரதேச சபைக்கு சொந்தமான பெருங்குளவீதி (கேணிக்கரை வீதி) தரமான முறையில் புனரமைத்தல், வேலணைப் பிரதேச சபையில் கிராமிய வீதிகளைப் புனரமைக்கும் அல்லது புதிதாக அமைக்கும் ஒப்பந்தகாரர்களில் பதிவுசெய்யப்பட்ட குறைந்த தரமான கேள்விகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அல்லது ஆலய அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியினுள் இடுதல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி **செயலாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.**

இவ் வேலைகளில் ஆர்வமுடன் பங்குபற்ற விரும்பும் ஒப்பந்தகாரர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

(தொலைபேசி இல : 021 432 3440 )

அறங்காவலர் சபையின் சார்பில்
கௌரவ செயலாளர்.

(C-4843)


# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 10 - 08 - 1940 |  | 18 - 01 - 2026 |

## திருமதி தங்கேஸ்வரி அருளானந்தம்

அல்வாய் மேற்கு திக்கத்தைப் பிறப்பிடமாகவும் நெல்லியடி கிழக்கில் வசித்தவருமான திருமதி தங்கேஸ்வரி அருளானந்தம் அவர்கள் நேற்று 18.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை - குஞ்சுப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகளும் அமரர் கந்தவனம் அருளானந்தம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் சாந்தினி(ஓய்வு நிலை இலங்கை வங்கி முகாமையாளர்), ஸ்ரீதரன்(கனடா), சுகந்தினி(நோர்வே), அமரர் சுதாகரன் ஆகியோரின் தாயாரும் செவ்வேள்(ஓய்வு நிலை நகர சபை செயலாளர், கட்டைவேலி- நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்), றஜிதா(கனடா), அமரர் ரமணன் ஆகியோரின் மாமியாரும் ஆரூர்(கனடா), சுகனவேள், சசிபன்(மருத்துவபீடம் கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 19.01.2026 திங்கட்கிழமை கொடிகாமம் வீதி அந்தோனியார் கோயிலடி நெல்லியடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
ந.செவ்வேள் (மருமகன்)

(C-4845)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானுக்கு விதிக்கப்பட்ட வரி

# இலங்கையை நேரடியாக பாதிக்காது

## எரிபொருள் விலை தொடர்பில் எரிசக்தி அமைச்சர் விளக்கம்



(கொழும்பு)

**ஈரானுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் நாடுகளுக்கு எதிராக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பால் விதிக்கப்பட்டுள்ள 25 சதவீத வரி விதிப்பு, இலங்கையை நேரடியாகப் பாதிக்காது என்று எரிசக்தி அமைச்சின் செயலாளர் உதயங்க ஹேமபால தெரிவித்துள்ளார்.**

இலங்கை தற்போது ஈரானிலிருந்து எரிபொருளை கொள்வனவு செய்யவில்லை.

அத்துடன், முறையான விலைமனுக்கோரல் நடைமுறைகளின் கீழ் தற்போது இந்தியா, சிங்கப்பூர் மற்றும் சீனாவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து இலங்கை எரிபொருள் கொள்வனவு செய்து வருவதாகவும், ஈரானுடன் தனியாக எந்த ஒப்பந்தமும் செய்யவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமது மொத்த எரிபொருள் தேவையின் 90 வீதத்துக்கு மேற்பட்டதை இறக்குமதி செய்து வருகின்றது.

அத்துடன், ஆண்டுதோறும் எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடப்படும் தொகை, சுமார் 4 முதல் 5 பில்லியன் அமெரிக்க டொலராக மதிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# பண மோசடி மூவர் கைது

(கொழும்பு)

தளபாடங்கள் வழங்குவதாகக் கூறி இணையத்தில் விளம்பரங்களை பதிவிட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பல நபர்களிடமிருந்து ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் மோசடி செய்த மூன்று பெண்களை மேல் மாகாண (தெற்கு) குற்றப் புலனாய்வுப் பிரிவு கைது செய்துள்ளது.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரிகள் மற்றும் அவர்களது மைத்துனி இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கைத்தொலைபேசி, தனியார் வங்கி விசா அட்டைகள் இரண்டு மற்றும் 87,000 ரூபாய் பணம் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மிரிஹான பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி)

# சாரதி அனுமதிப் பத்திர விநியோகம் மார்ச் மாதத்திற்குள் நிறைவடையும்

## மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்

(கொழும்பு)

அச்சிடுவதற்கு நிலுவையில் உள்ள சாரதி அனுமதிப் பத்திர அட்டைகளை, அச்சிட்டு விநியோகிக்கும் நடவடிக்கை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் நிறைவடையும் என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, இதுவரை சாரதி அனுமதிப் பத்திர அட்டைகளைப் பெற்றுக்கொள்ளாத 5 இலட்சம் சாரதிகளுக்கான அச்சிட்ட அட்டைகள் அஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கப்படவுள்ளதாக, திணைக்களத்தின் ஆணையாளர் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அனுமதிப் பத்திரத்தை அச்சிடும் அட்டைகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக, நிரந்தர அனுமதி அட்டைகள் வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தேவையான அட்டைகள் தற்போது இறக்குமதி செய்யப்பட்டு அச்சிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதால், எதிர்வரும் மார்ச் மாதத்தில், நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார். (நி)

# 1,500 உப்புக் கொள்கலன்கள் துறைமுகங்களில் தேக்கம்

(கொழும்பு)

சுமார் 1,500 இற்கும் மேற்பட்ட உப்புக் கொள்கலன்கள் இலங்கை துறைமுகங்களில் தேங்கியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட காலம் கடந்த பின்னரே, இந்த கொள்கலன்கள் இலங்கைக்கு வந்துள்ளதாக இலங்கை சுங்கம் மற்றும் வர்த்தக அமைச்சு என்பன குறிப்பிட்டுள்ளன.

கடந்த 2025 மே மாதம் 15 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 10 ஆம் திகதி வரை மாத்திரமே உப்பு இறக்குமதிக்கு அனுமதி வழங்கி வர்த்தமானி வெளியிடப்பட்டது.

இதனை இறக்குமதியாளர்கள் மீறியதால், அந்த சரக்குகளை விடுவிக்க முடியாது என்றும், அவை கட்டாயமாக மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறக்குமதியாளர்கள் சரக்குகளைப் பெற்றுக்கொள்ளாததால் அவை கைவிடப்பட்ட சரக்குகளாகக் கருதப்படுகின்றன.

அத்துடன் மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கான அதிக செலவு காரணமாக இறக்குமதியாளர்கள் அதற்கு முன்வரவில்லை என இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

அதனால், சுங்க வரி அல்லது துறைமுகக் கட்டணங்களையும் வசூலிக்க முடியாது உள்ளதாகவும் இலங்கை சுங்கம் குறிப்பிட்டுள்ளது. (நி)

# கட்டுப்பாட்டை இழந்து

## விபத்திற்குள்ளான பயணிகள் பேருந்து

- ★ சாரதி உயிரிழப்பு
- ★ எட்டு பயணிகள் வைத்தியசாலையில்



(கொழும்பு)

கொழும்பிலிருந்து வெலிமடை நோக்கிச் சென்ற தனியார் பயணிகள் பேருந்து ஒன்று நேற்றுக் காலை ஹல்துமுல்ல, உவதென்ன பகுதியில் கவிழ்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் பேருந்தின் சாரதி உயிரிழந்துள்ளதுடன், பேருந்து நடத்துநர், குழந்தை மற்றும் பெண் ஒருவர் உட்பட எட்டு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாரதி இருக்கைக்கு அருகிலிருந்த பேருந்தின் கதவு திடீரென திறந்ததாகவும், அந்த நேரத்தில் சாரதி அதை மூட முயன்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது பேருந்து கட்டுப்பாட்டை இழந்து அருகிலிருந்த மண்மேட்டில் மோதி வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது பேருந்திலிருந்து தூக்கி வீசப்பட்டு வீதியின் குறுக்கே விழுந்த சாரதி, படுகாயமடைந்த நிலையில், உள்ளூர்வாசிகளால் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் பேருந்து நடத்துநர், ஒரு சிறு குழந்தை மற்றும் பெண் ஒருவர் உட்பட எட்டு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஏழு வயது குழந்தை உட்பட நான்கு பேர் மேலதிக சிகிச்சைக்காக தியத்தலாவை அடிப்படை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நடந்த நேரத்தில் சாரதி சீட் பெல்ட் அணியவில்லை என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (நி)

# ரமழான் நோன்பு காலம் வேலை நேரத்தில் மாற்றம்

## வெளியானது சுற்றறிக்கை

(கொழும்பு)

ரமழான் காலத்தில் அரச உத்தியோகத்தர்கள் மத வழிபாடுகளில் ஈடுபடுவதற்கான விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் அலோக பண்டாரவினால் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 21 ஆம் திகதி வரை ரமழான் பண்டிகைக்கான நோன்பு நோற்கப்படுகின்றது.

இதன்போது, இஸ்லாமியர்கள் தங்களது வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு ஏற்ற வகையில், தொழில் நேரத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை ரமழான் பண்டிகைக்கு 14 நாட்களுக்கு முன்னர் தகுதியான ஊழியர்களுக்குப் பண்டிகைக்கான முன்பணம் வழங்க வேண்டும் எனவும் அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இந்திய நாட்டவர் என்பதால் ஐ.சி.சி பிரதிநிதிக்கு விசா மறுப்பு

### பங்களாதேஷ் அதிரடித் தீர்மானம்




பாதுகாப்பு காரணங்களுக்காக இம் முறை ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் போட்டிகளை இந்தியாவில் விளையாடாமல் இருக்க பங்களாதேஷ் எடுத்துள்ள தீர்மானம் குறித்து கலந்துரையாடுவதற்காக, பங்களாதேஷ் செல்லவுள்ள ஐ.சி.சி பிரதிநிதிக்கு விசா வழங்காதிருக்க பங்களாதேஷ் தீர்மானித்துள்ளது. குறித்த பிரதிநிதி இந்திய நாட்டவர் என்பதே அதற்குக் காரணம் என அவர் கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், ஐசிசி ஊழல் தடுப்பு மற்றும் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைவர் அண்ட்ரூ எஃப். கிரேட் நேற்று டாக்கா நகருக்கு வருகை தரவுள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் அமினுல் இஸ்லாம் புல்புல் தெரிவித்துள்ளார். இந்தியா மற்றும் பங்களாதேஷ் இடையே நிலவும் அரசியல் முறுகல் நிலை காரணமாக, பாதுகாப்பு காரணங் களை முன்னிட்டு இந்தியாவில் நடைபெறும் போட்டிகளை இலங்கைக்கு மாற்றுமாறு பங்களாதேஷ் அதிகாரிகள் ஐ.சி.சியிடம் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

எவ்வாறாயினும், போட்டித் தொடரின் அட்டவணை ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதால், தமது நிலைப்பாட்டை மாற்ற முடியாது என ஐ.சி.சி வலியுறுத்தியுள்ளது. (3)

## பந்தயத்தின் போது திடீரென தீப்பற்றி எரிந்த அஜித்குமாரின் 'ரேஸிங் கார்'




டுபாயில் நடைபெற்று வரும் புகழ் பெற்ற "டுபாய் 24 ஹவர்ஸ்" சிற்றூந்து பந்தயத்தின் போது, நடிகர் அஜித் குமாரின் ரேஸிங் அணியைச் சேர்ந்த சிற்றூந்து திடீரென தீப்பற்றி எரிந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

டுபாய் ஆட்டோட்ரோம் ஓடுதளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பந்தயத்தில் அஜித்குமார் ரேஸிங் அணியின் சார்பில் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த வீரர் அயர்டன் ரெடாண்ட் சிற்றூந்தை ஓட்டிச் சென்றார்.

போட்டியின் போது எதிர்பாராத விதமாக வாகனத்தின் முன் இயந்திரப் பகுதியில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு, சிற்றூந்து முழுவதும் கரும்புகை சூழ்ந்து தீப்பற்றத் தொடங்கியது.

தீப்பிடித்ததை உணர்ந்த அயர்டன் ரெடாண்ட், உடனடியாகச் சாதுரியமாகச் செயற்பட்டு சிற்றூந்தை ஓடுதளத்தின் ஓரமாக நிறுத்திவிட்டு வெளியே குதித்தார். இதனால் அவர் எவ்வித காயமுமின்றி அதிஷ்டவசமாக உயிர் தப்பினார்.

உடனடியாக அங்கு வந்த தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்புக் குழுவினர் தீயை அணைத்தனர். எனினும், சிற்றூந்து பலத்த சேதமடைந்தது.

கடந்த ஆண்டு பயிற்சியின் போது அஜித் செலுத்திய சிற்றூந்து விபத்துக்குள்ளான நிலையில், தற்போது அவரது அணியின் சிற்றூந்து தீப்பிடித்துள்ளது. (3)

## ஜூனியர் உலகக் கிண்ணம்

## 203 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அபாரவெற்றி!




நமீபியாவின் விண்ட்ஹோக்கில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியின் தொடக்க ஆட்டத்தில் ஜப்பான் அணியை 203 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து இலங்கை அணி ஒரு வரலாற்றுச் சாதனையை படைத்துள்ளது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இலங்கை 50 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 387 ஓட்டங்களைக் குவித்தது.


விரான் சமுதித்த 143 பந்துகளை எதிர்கொண்டு 26 பவுண்டரிகளையும் ஒரு சிக்ஸையும் விளாசி 192 ஓட்டங்களையும், மறுபக்கத்தில் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடிய திமந்த மஹாவித்தான 125 பந்துகளை எதிர் கொண்டு 11 பவுண்டரிகளுடன் 115 ஓட்டங்களைப் பெற்றார். இவர்களை விட அணித் தலைவர் விமத் தின்சார 44 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந் தார்.

பந்துவீச்சில் திமத்தி முவர் 43 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜப்பான் 50 ஓவர்களும் தாக்குப் பிடித்து 8 விக்கெட்டுகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது. பொறுமையுடன் துடுப்பெடுத்தாடிய முன்வரிசை வீரர் ஹியூகோ கெலி 162 பந்துகளில் 8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ் உட்பட 101 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார். ஏனைய துடுப்பாட்ட வீரர்களில் நிஹார் பாமர் மாத்திரம் 20 ஓட்டங்களுக்கு மேல் பெற்றார்.

இப் போட்டியில் ஆட்ட நாயகனாக விரான் சமுதித்த தெரிவு செய்யப்பட்டார். (3)

## உலகக்கிண்ண கால்பந்து அணிகள் அமெரிக்காவில் நுழையத் தடையில்லை

### அமெரிக்க வெளியுறவுத்துறை அறிவிப்பு




அமெரிக்கர்களின் செல்வத்தைச் சுரண்டுவதைத் தடுக்கும் நோக்கில், ஜனாதிபதி ட்ரம்ப் கடந்த வாரம் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார்.

இதன்படி, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஈரான், ரஷ்யா உள்ளிட்ட 75 நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கான குடியேற்ற விசாவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்த அதிரடி நடைமுறை எதிர்வரும் ஜனவரி 21 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதுடன், இந்த அறிவிப்பு விளையாட்டு உலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டு பிபா (FIFA) உலகக் கிண்ண கால்பந்து போட்டிகள் அமெரிக்கா மற்றும் மெக்சிகோவில் நடைபெற உள்ள நிலையில், தடைப் பட்டியலில் உள்ள நாடுகளில் 15 நாடுகள் இப்போட்டியில் பங்கேற்கின்றன.

அத்துடன் பிரேசில், மொராக்கோ, கொலம்பியா, ஈரான், உருகுவே போன்ற நாடுகளின் வீரர்களும் ரசிகர்களும் அமெரிக்காவிற்குள் நுழைய முடியுமா என்ற கேள்வி எழுந்தது.

இந்தக் குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் புதிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதில், இந்தத் தடை என்பது அமெரிக்காவில் நிரந்தரமாக வசிக்கவும், பணிபுரியவும் விரும்புபவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று தெளிவுபடுத்தியுள்ளது.

சுற்றுலாப் பயணிகள், விளையாட்டு வீரர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் ஊடகவியலாளர்கள் பயன்படுத்தும் குடியேற்றம் அல்லாத விசாக்களுக்கு எந்தத் தடையும் இல்லை. எனவே, உலகக் கிண்ண கால்பந்து ரசிகர்கள் கவலையின்றி போட்டிகளைக் காணத்திட்டமிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல் குறித்து

# சகல கட்சிகளுடனும் பேசுவோம்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

**பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளுடனும் மாகாண சபைத் தேர்தல் குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோமென பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் காணப்படும் அடிப்படை சட்ட மற்றும் தொழில்நுட்ப சிக்கல்களுக்கு தீர்வு காண வேண்டும். காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் தேர்தலை நடத்த முடியாது. மாகாணசபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடத்த வேண்டும் என்று ஒரு தரப்பினரும், புதிய தேர்தல் முறையில் நடத்த வேண்டும் என்று பிறிதொரு தரப்பினரும் யோசனைகளை முன்வைத்தார்கள்.

மாகாணசபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறையில் நடத்துவது என்பது குறித்து ஆராய்ந்து விதப்புரைகளை முன்வைப்பதற்கு 12 பேரை உள்ளடக்கிய குழுவை நியமிக்கும் யோசனை அண்மையில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

சகல எதிர்க்கட்சிகளின் பிரதிநிதித்துவத்தையும் உள்ளடக்கிய வகையில் சபாநாயகரால் இந்த குழு வெகுவிரைவில் நியமிக்கப்படும். இது தொடர்பான அறிவிப்பை சபாநாயகர் எதிர்வரும் வாரம் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாணசபைத் தேர்தலில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு பாராளுமன்றத்தின் ஊடாக தீர்வு காண்பதற்கு சகல எதிர்க்கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். மாகாணசபைத் தேர்தல் குறித்து சகல அரசியல் கட்சிகளுடனும் வெளிப்படையாக பேச்சுவார்த்தையில் ஈடுபட தயாராகவுள்ளோம் என ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 400 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 800 | 600 |
| தக்காளி | 500 | 550 | 700 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 250 | 150 |
| கோவா | 250 | 300 | 300 | 300 |
| கரட் | 400 | 450 | 600 | 300 |
| பூசணி | 120 | 140 | 150 | 200 |
| புடோல் | 250 | 250 | 200 | 400 |
| வாழைக்காய் | 150 | 140 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 200 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 200 | 200 |
| பாகற்காய் | 800 | 650 | 400 | 1000 |
| வெண்டக்காய் | 400 | 300 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 250 | 250 | 300 |
| பயற்றங்காய் | 900 | 800 | 400 | 300 |
| லீக்ஸ் | 400 | 400 | 500 | 600 |
| பீற்றூட் | 600 | 500 | 1000 | 500 |
| கறிமிளகாய் | 900 | 800 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 0 | 0 | 1000 | 0 |
| போஞ்சி | 800 | 500 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 400 | 350 |
| கீரை – 1 பிடி | 100 | 80-120 | 150 | 150 |
| தேசிக்காய் | 350 | 180 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 180 | 150 | 200 |
| இராசவள்ளி | 600 | 500 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 600 | 400 | 500 | 800 |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 200 | 100 | 150 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3348

**லுகிதா**




**மேர்வின்**





**பெனிகின்**





**சர்மா**




**தனுசியா**




**யதுர்ஷா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மரக்கடத்தல்

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு நாச்சிக்குடா மக்கள் கோரிக்கை



(தருமபுரம்)

**விசுவமடு நாச்சிக்குடா பகுதியில் சட்ட விரோதமாக பெறுமதிமிக்க மரங்களை வெட்டிக் கொண்டு செல்லும் செயற்பாடு அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.**

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு நாச்சிக்குடா பகுதியில் அண்மைக்காலமாக மக்கள் குடியிருப்புப் பகுதிகள், பொது இடங்கள் மற்றும் நெத்தலி ஆறு பகுதிகளில் இரவு வேளைகளில் பெறுமதிமிக்க மரங்களை சட்டவிரோதமான முறையில் எந்தவித அனுமதியும் இன்றி வெட்டப்பட்டு வேறு பகுதிக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

கடந்த 15 ஆம் திகதி பொங்கல் தினத்தன்று வீட்டு உரிமையாளர் உறவினர் வீட்டில் தங்கி இருந்த வேளை அவருக்குச் சொந்தமான காணியில் காணப்பட்ட பெறுமதி மிக்க முதிரை மரங்களும் நள்ளிரவு நேரத்தில் வெட்டப்பட்டு உழவு இயந்திரத்தின் மூலம் வேறு பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

குறித்த விடயம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (8-316)

# தென்மராட்சி சிவபூமி பாடசாலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி சிவபூமி பாடசாலைத் திறப்பு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு "தங்கவாசம்", வேலாயுதம் வீதி, சாவகச்சேரியில் இடம்பெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி. ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் வரவேற்புரையை இளைப்பாறிய விரிவுரையாளர் சி.குணசீலன் ஆற்றவுள்ளார்.

ஆசியுரையை சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான ஆலய பிரதம குரு கலாநிதி சிவஸ்ரீ.து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் வழங்குவார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச செயலாளர் எப்.சி.சத்தியசோதி, கௌரவ விருந்தினர்களாக இங்கிலாந்து கேன் புற்றுநோய் காப்பக தலைவர் வைத்திய கலாநிதி.கமலா அருணாசலம், சாவகச்சேரி நகரசபை தவிசாளர் வ.சிறிபிரகாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

குறித்த நிகழ்வில் சிவபூமிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வும் இடம்பெறவுள்ளது. (8)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு


(கரணவாய்)

யாழ்ப்பாணம் - துன்னாலை காட்டுப் பகுதியில் பல வருடங்களாக சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த சந்தேக நபரொருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நெல்லியடி அரச புலனாய்வு சேவைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் துன்னாலை காட்டுப் பகுதியை பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

இதன்போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் தப்பி ஓடிய மற்றைய சந்தேக நபர்களையும் கைது செய்யும் நடவடிக்கையில் நெல்லியடி பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இச் சுற்றிவளைப்பில் 50 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு 7 இலட்சத்து 80 ஆயிரம் மில்லிலீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.



மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (8-60104)




## யாழ். நகர வீதியில் தேங்கி நிற்கும் தண்ணீரை காண்மின்களே!

கழிவு மேலாண்மை என்பது ஒரு நகரத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது.

யாழ்ப்பாண நகரம் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரமாக கணிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் எம்மிடம் கழிவு முகாமைத்துவம் பூச்சிய நிலையில் இருப்பது வேதனைக்குரியது.

அதிலும் கழிவுநீர் முகாமைத்துவத்தில் நாம் அதல பாதாளத்தில் இருக்கின்றோம் என்பதே மெய்.

நகரத்தின் பல வீதிகள் அகலிப்புச் செய்யப்பட்டன. காப்பற் இடப்பட்டன. ஆயினும் மழைநீர் வழிந்தோடும் வாய்க்கால்கள், கழிவுநீர் வாய்க்கால்கள் தொடர்பில் நாம் இம்மியும் அக்கறை செலுத்தவில்லை.

தேவையான வீதிகளுக்கு கழிவுநீர் வாய்க்கால்கள் இடாமல், தேவையில்லாத பல வீதிகளின் இருமருங்கும் வாய்க்கால்கள் அமைத்திருப்பது அபத்தமானது.

ஆம், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியும் ஸ்ரான்லி வீதியும் சந்திக்கும் சந்தியில், இலங்கை வங்கிப் பக்கமாக உள்ள கடைத்தொடரின் முகப்பில் வீதியோரத்தில் இருக்கும் மின்கம்பத்துடன் ஒரு தண்ணீர் குழாய் பொருத்தப்பட்டுள்ளது.

கடைகளில் வேலை செய்யும் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் குறித்த தண்ணீர் குழாயைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் குறித்த வீதியோரத்தில் தண்ணீர் தேங்கி நிற்பதுடன் அந்த நீர் இலங்கை வங்கி முகப்பு வரை செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

யாழ்.நகரிலுள்ள அநேகமான கடைகளில் தண்ணீர் வசதி இன்மையால், குறித்த தண்ணீர் குழாய் பலருக்கும் நன்மை பயப்பதாக இருந்தாலும் குறித்த தண்ணீர் வீதியில் தேங்கி நிற்பது பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதுடன் யாழ் நகரின் அழகையும் கெடுப்பதாய் அமைந்துள்ளது.

எனவே இவ்விடயத்தில் யாழ்.மாநகர சபை கரிசனை கொண்டு, வடிகால் ஒன்றை அமைத்து அருகிலுள்ள குளத்திற்குக் குறித்த நீர் செல்வதற்கு ஆவன செய்ய வேண்டும்.



அன்பு வாசகர்களே!

**உங்கள் பிரதேசங்களில் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளை 'குறைகேள் அரங்கு' இற்கு புகைப் படத்துடன் எழுதி அனுப்புங்கள்.**

"குறைகேள் அரங்கு",
ஆசிரியர் வலம்புரி,
இல.191 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

076 636 3378
valampurii@yahoo.com

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச் சந்தி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்தும் 16 தினங்கள் உற்சவங்கள் நடைபெறும்.

இவ் உற்சவங்களில் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழாவும் 31 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்கவில் இளைஞன் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய வருகை முனையத்தின், "கிரீன் சேனல்" வழியாக சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் சுமார் 68,85,000 ரூபாய் மதிப்புள்ள சிகரெட்டுகள் மற்றும் மின்னணு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக் கிழமை காலை 5 மணிக்கு துபாயிலிருந்து எமிரேட்ஸ் விமானம் EK-654 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு குறித்த சந்தேக நபர் வந்திருந்தார்.

பாணந்துறை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் 3 பயணப்பைகளில் 44,400 "மான்செஸ்டர்" மற்றும் "பிளாட்டினம்" சிகரெட்டுகள் மற்றும் 15 மின்னணு சிகரெட்டுகள் அடங்கிய 222 அட்டைப்பெட்டிகளை கொண்டுவந்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் அவரை தடுத்து நிறுத்தி, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## திருவருள்மிகு குருநாத சுவாமி கோயில் தெல்லிப்பழை

திருப்பணிச் சபை
விஷேட பொதுக்கூட்டம்

**காலம் :-25.01.2026 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் :- மாலை 3.30 மணி**
**இடம் :- கோயில் மண்டபம்**

மேற்படி ஆலய திருப்பணிச்சபையின் விஷேட பொதுக் கூட்டத்தில் ஆலயத்தில் நடைபெறவேண்டிய திருப்பணிகள், மற்றும் மகோற்சவம். திருப்பணிச்சபை புனரமைப்பு போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எட்டப்பட வேண்டி உள்ளதால் உபயகாரர்கள், குருநாதனடியார்கள், அன்பர்கள், அபிமானிகள் அனைவரும் சமூகந் தந்து குருநாதசுவாமியின் பேரருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

(C-4837)

நன்றி

தலைவர்
அ.சண்முகநாதன்

செயலாளர்
ப.சேயோன்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**தில்லையம்பலம் சாந்தகுமார்**

(ஆசிரியர்– யா/வட்டு மத்திய கல்லூரி)

தேசிய ரீதியில் நடைபெற்ற அரச உத்தியோகத்தர்களுக் கிடையிலான ஆக்கத்திறன் போட்டியில் பாடாக்கத்தில் இரண்டாம் இடம் பெற்றமைக்காக கல்லூரிச் சமூகம் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

(6574)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/வட்டு மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை.

சிவமயம்

## தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்

# புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ சமர்ப்பண விஞ்ஞாபனம் -2026

| கர்மாரம்பம் | எண்ணெய்க்காப்பு | கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 28.01.2026 | 29.01.2026 | 30.01.2026 |
| புதன்கிழமை | வியாழக்கிழமை | வெள்ளிக்கிழமை |
| காலை 7.53 மணி முதல் | காலை 8.00 - மாலை 3.00 மணி வரை | காலை 7.32 -8.06 மணி வரை |

**அம்பாள் அடியார்களே!**

கும்பாபிஷேகத்திலும் அதற்கு முன்னதாக நடைபெறும் கிரியைகளிலும் கலந்துகொண்டு தங்களாலான சிவத் திரவியங்களை கொடுத்தும் அம்பாளின் இஷ்டசித்திகளையும் பெற்று வாழ்வில் சீரும் சிறப்புடனும் வாழ்வீர்களாக.

**மண்டலாபிஷேகமும் அன்னதானமும் 48 நாட்கள் நடைபெறும்.**

(C-4839)

இலங்கை வங்கி, பருத்தித்துறை
நடைமுறைக் கணக்கு
இலக்கம் 91441040

தும்பளை நெல்லண்டை அம்மன்கோவில்
தரும பரியாலனசபை,
தொலைபேசி இல.021 205 6060


THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH
வடக்கில் மிகப்பெரிய வர்த்தக கண்காட்சி

JITF 2026
16TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR

வருகை


23 24 25
JANUARY ஜனவரி
10.00AM - 8.00PM
MUTTRAWELI GROUNDS
முற்றவெளி மைதானம்

PLATINUM SPONSOR
DIMO THE PERFECT PARTNER
DIAMOND SPONSOR
NIPPON CEMENT
GOLD SPONSORS
SILVER SPONSORS
OFFICIAL SPONSORS
ORGANIZED BY LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH CCIY

IMALKA : +94 77 1093792 | imalka@saexhibitions.com
www.jitf.lk


# மரண அறிவித்தல்

தோற்றம்
1936 - 08 - 11



மறைவு
2026 - 01 - 17

## சின்னத்துரை மயில்வாகனம்

யாழ்.அளவெட்டி தெற்கு அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மயில்வாகனம் அவர்கள் 17.01.2026 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், தெய்வானப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும், நாகேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும்,

பகீரதன்(யாழ்ப்பாணம்), பத்மலோஜினி(சுவிஸ்), அருட்செல்வன், அருந்ததி(கனடா), கலைவாணி(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான வாமதேவன், நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,வேலாயுதம் நாகராசா, வேலாயுதம் பூவாலராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ராஜன்(சுவிஸ்),சுஜாதா(யாழ்ப்பாணம்), வருணாளினி(கொழும்பு), லோகேஸ்வரன்(கனடா), இதயவிஸ்னு (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,திலக்ஷன்(கனடா), நிரோஸ் (சுவிஸ்), திலக்ஷனா(இலங்கை), டினேஸ்(சுவிஸ்),கணபரன்(கனடா), சஜினா(கனடா), யுபபரன் (இலங்கை), சஜ்சனா(கனடா), உமயா(கனடா), காலஞ்சென்ற வசீகரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.01.2026 இன்று திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி மேற்கு இந்து மயானத்திற்கு கொண்டு செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உளவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(1954)

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பாகிஸ்தானில் கடும் பனிமூட்டம்

# 14 பேரை காவு வாங்கிய கோர விபத்து!



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நிலவும் மோசமான பனி மூட்டம் காரணமாக ஏற்பட்ட வாகன விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

சாரதிக்கு பனி மூட்டத்தால் வீதி தெரியாமல் போனதன் காரணமாக, பாலத்தில் இருந்து பாரவூர்தி கவிழ்ந்த விபத்திலேயே இவ்வாறு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் லாகூரில் இருந்து சுமார் 200 கி.மீ. தூரத்தில் உள்ள சர்கோதா மாவட்டத்திலேயே விபத்து சம்பவித்துள்ளது.

இந்த மாவட்டத்தில் உள்ள கோட் மொமின் என்ற பகுதியில் சென்று கொண்டிருந்த பாரவூர்தியே விபத்துக்குள்ளாகியுள்ளது.

கடும் பனி மூட்டம் காரணமாக முக்கிய சாலைகள் மூடப்பட்டிருந்ததாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த வாகனத்தில் 23 பேர் இருந்ததாகவும், இவர்கள் கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

மேலும், உயிரிழந்தவர்களில் 8 குழந்தைகளும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (3)

# ஆட்சி மாற்றத்து
# ஈரானுக்கு வந்து

**(வோஷிங்டன்) ••••••••••••••••**

**ஈரானில் தற்போது ஆட்சி மாற்றம் மற்றும் புதிய தலைமைக்கான நேரம் வந்துவிட்டது என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

ஈரானில் 37 ஆண்டுகளாக ஆட்சி அதிகாரம் செய்து வரும் கமேனியின் தலைமைக்கு எதிராகவும், விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடி ஆகியவற்றுக்கு எதிராகவும் மக்கள் வீதிகளில் இறங்கி போராடி வருகின்றனர்.

அரசுக்கு எதிரான இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை வன்முறையாளர்கள் என்று கூறி, கமேனி ஒடுக்கி வருகிறார். கிட்டத்தட்ட 3000 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

நாளுக்கு நாள் ஈரானில் நிலைமை கட்டுக் கடங்காமல் இருக்க, ஈரானில் போராட்டம் நீடித்தால் அங்கு அமெரிக்கா ராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று ஜனாதிபதி

இருந்

மெய்

இப்டே

தலை

வந்து

கூறி உ

ட்ர

# உகண்டாவில் ஏழாவது முறையாக ஜனாதிபதியானார் முசவேனி



(கம்பாலா)

உகண்டாவில் கடந்த 40 ஆண்டுகளாகப் பதவியில் இருக்கும் யோவேரி முசவேனி அந் நாட்டு ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்று ஏழாவது முறையாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உகாண்டாவின் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட 81 வயதான யோவேரி முசவேனி, 71.65 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட 43 வயதான பாபி வைன் 24.72 சதவிகித வாக்குகளைப் பெற்றுள்ளார்.

சுமார் 4.5 கோடி மக்கள் தொகை கொண்ட உகண்டாவில், இந்த முறை தேர்தலில் 2.16 கோடி மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றனர்.

எனினும் 52 சதவிகிதத்தினர் மாத்திரமே வாக்களித்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

1986ஆம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து, யோவேரி முசவேனி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

பாராளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஆளுங் கட்சியான முசவேனியின் தேசிய எதிர்ப்பு இயக்கக் கட்சி, வயது மற்றும் பதவிக்கால வரம்புகளை நீக்குவதற்கு அரசியலமைப்பை பல முறை மாற்றியதன் மூலம் முசவேனியின் பதவியும் தக்கவைக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. (3)

## ஐரோப்பிய ஒன்றியம் - மெர்கோசூர் இ
## சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்ச

27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் தென் அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பான மெர்கோசூர் ஆகியவற்றிற்கு இடையே நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் உத்தியோகபூர்வமாகக் கையெழுத்தானது.

சுமார் 25 ஆண்டுகளாக இழுபறியிலிருந்த இந்தப் பேச்சுவார்த்தைகள் தற்போது வெற்றியில் முடிந்துள்ளன.

இது உலகின் மிகப் பெரிய சுதந்திர வர்த்தக வலயங்களில் ஒன்றை உருவாக்குவதற்கான அடித்தளமாக அமையும் எனப் பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகள் மற்றும் மெர்கோசூர் அமைப்பில் உள்ள பிரேசில், அர்ஜென்டினா, உருகுவே ம

ஆகிய நாடுக

ங்கும்.

இந்த

மூலம் இரு

ளுக்கும் இடை

வரிகள் பெரு

கப்பட்டு, விவ

கைத்தொழில்

ஏற்றுமதி, இ

குவிக்கப்படு

தேச ஊடக


வெளியிட்டுள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...நதுக்கான நேரம் ...நதுவிட்டது - ட்ரம்ப்



திபதி ட்ரம்ப் அறிவித்து இருந்தார். தனது கூற்றை மெய்ப்பிக்கும் வகையில், இப்போது ஈரானில் புதிய தலைமைக்கான நேரம் வந்துவிட்டது என்று அவர் கூறி உள்ளார்.

ட்ரம்ப் மேலும் கூறி உள்ளதாவது,

குற்ற உணர்ச்சி உள்ளவராக, ஒரு நாட்டின் தலைவராக இதற்கு முன் இல்லாதவாறு வன்முறை மூலம் நாட்டை அழித்து வருகிறார் கமேனி. நாட்டை தொடர்ந்து இயங்க வைக்க, அமெரிக்காவை நான் வைத்திருப்பது போல, இங்கும் அதை முறையாக நடத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். ஆயிரக்கணக்கான மக்களை கொல்லுதல் கூடாது என ட்ரம்ப் கூறி உள்ளார். (3)

## தென்கொரியாவில் பாரிய தீ விபத்து தீக்கிரையாகிய குடிசைகள்!

(சியோல்)

தென் கொரியாவின் தலைநகர் சியோலின் புறநகர்ப் பகுதியில் உள்ள குடிசைப்பகுதியில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் பல வீடுகள் தீக்கிரையாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சியோலின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள குரியோங் என்ற குடியிருப்புப் பகுதியில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக வெள்ளிக்கிழமை சுமார் 300 தீயணைப்பு வீரர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். இது வரை உயிரிழப்பு அல்லது காயங்கள் ஏற்பட்டதாக எந்த தகவலும் இல்லை என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தீ விபத்து ஏற்பட்ட சுமார் ஆறு மணி நேரத்திற்குப் பிறகே தீயை கட்டுக்குள் கொண்டுவந்ததாக அந்நாட்டு தீயணைப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளில் 1,200 இற்கும் மேற்பட்டோர் தீயணைப்பு வீரர்கள் பொலிஸார் ஈடுபட்டதுடன் தீ விபத்திற்கான காரணம் குறித்து விசாரணைகளும் நடைபெற்று வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3)




## ...காசூர் இடையே ... கைச்சாத்து

உருகுவே மற்றும் பராகுவே ஆகிய நாடுகள் இதில் அடங்கும்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு பிராந்தியங்களுக்கும் இடையிலான சுங்க வரிகள் பெருமளவு குறைக்கப்பட்டு. விவசாயம் மற்றும் கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதி. இறக்குமதி ஊக்குவிக்கப்படும் எனச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3)



## இங்கிலாந்தில் அமையவுள்ள சீன தூதரகம்; எதிர்ப்பு தெரிவித்து மக்கள் போராட்டம்




(லண்டன்)

இங்கிலாந்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க டவர் ஆஃப் லண்டன் பகுதிக்கு அருகில் சீனா தனது மிகப் பெரிய தூதரகத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் இந்த தூதரகத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் பலர் இணைந்து போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் அங்கு கட்டப்பட்டுள்ள சீன சூப்பர் தூதரகம் இந்த பிரம்மாண்டமான கட்டிடத்தின் அடியில் உள்ள ரகசிய நிலத்தடி அறைகள் மற்றும் நிதித் தரவுகளைக் கடத்தும் கேபிள்களுக்கு அருகில் அமைக்கப்படவுள்ளமையினால் அங்கு உளவு பார்க்கும் திட்டம் இருக்கலாம் என போராட்டக்காரர்கள் அச்சம் வெளியிடுகின்றனர். சீன உளவுத்துறையின் ஊடுருவல் மற்றும் உளவு பார்க்கும் அபாயம் இருப்பதாக இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எச்சரித்தும், அந்நாட்டு அரசு இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க முன்வந்துள்ளது

இந்நிலையில் இதனை கண்டித்தும் எதிர்ப்பு தெரிவித்தும் அப்பகுதியில் பெருமளவான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (3)

## வரலாறு காணாத அளவுக்கு ரஷ்யாவில் கடும் பனிப்பொழிவு

(மொஸ்கோ)

ரஷ்யாவின் கம்சட்கா பகுதியில் பயங்கர பனிப்பொழிவு ஏற்பட்ட காட்சிகள் தற்போது வெளியாகி அதிர்ச்சியடைய வைத்துள்ளன.

ரஷ்யாவில் 146 ஆண்டுகள் இல்லாத அளவிற்கு இடைவிடாத பனிப் பொழிவு ஏற்பட்டுள்ளது.

தலைநகரமான மாஸ்கோ தற்போது மிகக் கடுமையான குளிரையும் வரலாற்றில் அரிதாக காணப்படும் அளவிற்கு பெரும் பனிப்பொழிவையும் சந்தித்து வருகிறது.

இதனால் சாலைகள் முழுவதும் பனியால் மூடப்பட்டுள்ளதால், நடை பாதைகள் கூட காணாமல் போயுள்ளன.

இதன் விளைவாக தனிப்பட்ட வாகன போக்குவரத்து மட்டுமல்லாமல், பேருந்து, ரயில் போன்ற பொதுப் போக்கு வரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

வீடுகளை விட்டு வெளியே வரமுடியாத அளவில் மக்கள் உறைந்து போயுள்ளனர். இவ்வாறான பனிப்பொழிவின் காட்சிகள் வெளியாகி அதிர்ச்சியடைய வைத்துள்ளன. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ் மற்றும் ஹெரோயினுடன் வேலணையில் இருவர் கைது

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருளை விற்பனைக்காக வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் ஊர்காவற்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேலணைப் பகுதியில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருபவர்கள் என பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் இருவரையும் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை இருவரது உடைமையில் இருந்தும் 2 கிராம் 350 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும், 12 கிராம் ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை, தமக்கு நாச்சிக்குடா பகுதியை சேர்ந்த போதை வியாபாரி ஒருவரே போதைப் பொருளை விநியோகிப்பதாக தெரிவித்துள்ளனர்.

அவர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில் குறித்த போதை வியாபாரியை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், கைது செய்யப்பட்டுள்ள போதை வியாபாரிகளிடமிருந்து போதைப்பொருளை வாங்குபவர்கள் தொடர்பிலும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (8-33)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்: பூரம்
கி-பா: 11
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSC,MSC, IT Specialist (Germany)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16441

பிறப்பு:1995- இந்து
நட்சத்திரம்:அத்தம்
உயரம்:5'8"
தகைமை/தொழில் -College, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/16442

பிறப்பு:1994-RC
உயரம்:5'5"
தகைமை/தொழில்-A/L, transport (own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16443

பிறப்பு: 1986- இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
கி-பா:36
2இல் செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்-A/L. லண்டன்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16447

பிறப்பு: 1996- இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்:5'8"
தகைமை/தொழில்: BSC, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/16448

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்: மகம்
12இல் சூரிசெவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BBA
எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்
தொ.இ: G/16477

பிறப்பு: 1999-இந்து
நட்சத்திரம்-கார்த்திகை
1இல்செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSC(IT), Teacher
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/16480

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்-5'4"
தகைமை/தொழில்: Diploma, Canada
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், விவாகரத்தானவர்
தொ.இ: G/16481

பிறப்பு-2000- இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
2இல்செவ்
கி.பா - 09
உயரம்: 5'
தகைமை/தொழில் -BCom, Assistant Accountant
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16483

பிறப்பு-1997 - இந்து
நட்சத்திரம்-புனர்பூசம்
1இல்செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSC(IT), QA
எதிர்பார்ப்பு - Degree and Employee
தொ.இ: G/16484

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 524



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## வாதத்திறமை

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் கூண்டிலே ஏறி நிற்கிறார். அவர் குற்றவாளியா இல்லையா என்பது இனிமேல் தான் நிரூபணமாக வேண்டும்.

அதனாலே அவர் தரப்பிலே பேசுறபோதும் வாதாடுகின்ற போதும் ரொம்பவும் சாமர்த்தியமாக, கவனமாக பேச வேண்டியிருக்கும்.ஏன் என்றால், நிரபராதிக்கு தண்டனை கிடைத்துவிடக் கூடாது இல்லையா?அவர் மேலே தப்பு இல்லை என்பது மாதிரி ஒரு சின்ன சந்தேகம் ஏற்பட்டாலும் அதை ஆய்வு செய்யப்படும். இப்படியெல்லாம் இருக்கிற தனாலே சில வழக்கு விசாரணைகள் ரொம்ப சுவாரஸ்யமாக அமைந்துபோவது உண்டு. வாதாடுவதையெல்லாம் பார்த்தீர்கள் என்றால் ரொம்ப சாமர்த்தியமாக இருக்கும்!

ஒரு ஆள் ஏதோ தப்பு செய்து விட்டான். வசமாக மாட்டிக் கொண்டான். பொலிஸிலே விசாரணை செய்தார்கள். அவன்தான் குற்றவாளி என்பது அவர்களுக்கு நல்லா புரிந்து போய் விட்டது. அதற்கான ஆதாரங்களும் நிறைய கிடைத்துவிட்டது! சாட்சிகளும் இருந்தது. கேஸ் கோர்ட்டுக்கு வந்தது. அவன் சார்பிலே ஒரு வக்கீல் வாதாடினார். தன்னுடைய கட்சிக்காரரை காப்பாத்தி விட வேண்டும் என்று விரும்பினார். அதற்காக ரொம்ப சாமர்த்தியமா என்னென்னமோ " பொயிண்ட் எல்லாம் எடுத்தும் சொல்லி வாதாடினார். என் கட்சிக்காரர் "குற்றவாளி இல்லை" என்று சொன்னார்.

இருந்தாலும் பொலிஸ் தரப்பிலே சாட்சியங்கள் எல்லாம் ரொம்ப பலமாக இருந்தது. குற்றவாளிக்கு எதிரான ஆதாரங்கள் ரொம்ப வலுவா இருந்தது. அதனாலே அவராலே எதுவும் செய்யமுடியவில்லைகடைசியா அவரைக் காப்பாத்துவதற்கு ஒரே ஒரு வழிதான் இருந்தது.வக்கில் நீதிபதியைப் பார்த்து பேச ஆரம்பித்தார்.கனம் நீதிபதி அவர்களே! குற்றம் செய்தது எதுவா இருந்தாலும் சரி அல்லது எவராயிருந்தாலும் சரி அவர்கள் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும் அல்லவா?" என்று கேட்டார். உடனே அந்த நீதிபதியும், ஆமாம்! உண்மைக் குற்றவாளிகள் தான் தண்டிக்கப்பட வேண்டும் என்றார்.உடனே, அடுத்தபடியாக அந்த வக்கில், "மை லார்ட்" இந்தக் குற்றத்தை செய்தது என்னுடைய கட்சிக்காரர் இல்லை! அவருடைய கைதான் அந்தக் குற்றத்தை செய்தது. என்று வாதாட ஆரம்பித்தார்.

நீதிபதி இதைக் கேட்டவுடனே யோசிக்க ஆரம்பிச்சார்"அது எப்படி? கை தான் தப்பு செய்தது என்றதால். அந்த கையை மட்டும் எப்படி தண்டிக்க முடியும்? கையை தண்டிக்கறது என்றால் அந்தக் கைக்கு உரியவரையும் சேர்த்துத் தானே தண்டிக்க முடியும்!" என்று யோசனை செய்தார். இருந்தாலும் சாமர்த்தியமா வாதாடுற அந்த வக்கீலிடம் கொஞ்சம் விளையாடிப் பார்க்கலாம் என்று முடிவு செய்தார்.உடனே வக்கீலைப் பார்த்துச்சொன்னார். "உண்மைதான்! உண்மையிலேயே அந்தக் கைதான் அந்த குற்றத்தை செய்திருக்கிறது என்று குறிப்பிட்டு அந்தக் கைதான் தண்டிக்கப்பட வேண்டும் அதனாலே கையை உடம்பிலேயிருந்து தனியாக எடுத்து தண்டனை கொடுக்கலாம்!" என்றார். ஆம்! மை லார்ட்!" என்றுசொல்லிக் கொண்டே இருக்கையை விட்டு எழுந்தார் அந்த வக்கீல், நேராக அவருடைய கட்சிக்காரர் இருந்த இடத்துக்குப் போனார். அவருடைய கையைத் தனியாக எடுத்துக் கொண்டு வந்து நீதிபதியிடம் கொடுத்து சட்டப்படி இந்தக் கைக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டுமோ கொடுங்கள் என்றார். அப்போது தான் விடயம் புரிந்தது அந்த ஆளுக்கு ஏற்கெனவே ஒரு கை கிடையாது போல இருக்கிறது. அவர் வைத்திருந்தது செயற்கை கை !இதுதான் வாதத்திறமை. இருந்தாலும் குற்றவாளி தண்டனையிலேயிருந்து தப்பிக்கமுடியாது! சில சமயம் குற்றவாளிகளிடம் கூட இந்த வாதத்திறமை இருக்கிறது. உண்டு ஆனால் வேறுவிதமாக!

கிராமத்திலே ஒரு சமயம் 100 ரூபா திருட்டுப் போய்விட்டது.. ஒரு ஆள் மேலே சந்தேகம். கூப்பிட்டு விசாரிச்சுப் பார்த்தாங்க. கடைசியிலே கிராமத்தலைவர் அந்த ஆளைப்பார்த்து சொன்னார். உன்மேலே எந்தத் தப்பும் இருக்கிறதாத் தெரியவில்லை! நீ நிரபராதி என்று பஞ்சாயத்தார் முடிவு செய்கிறோம். நீ போகலாம்!" என்றார்

சரி என்று புறப்பட்டவன் ஏதோ சந்தேகத்திலே திரும்பி பஞ்சாயத்தாரைப் பார்த்து அப்படி என்றால். அந்த நூறு ரூபாயை நானே வைத்திருக்கலாமா என்று கேட்டான். ரொம்பவும் உண்மையான ஆள்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# பொட்டுக்கடலை




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பொட்டுக்கடலையில் இருக்கும் புரதச் சத்தானது தசைகள், திசுக்களின் வளர்ச்சிக்கு மிக மிக அவசியமானது

அதிலும் வளரும் குழந்தைகளுக்கு மிகவும் சிறந் தது. எமது பாரம்பரிய உணவில் பொட்டுக் கடலை சட்னி சிறந்த உணவாகும். அதற்கு பொட்டுக்கடலை, தேங்காய், மிளகாய், உப்பு பயன்படுத்தி தயாரிக்கப்பட லாம். இப் பொட்டுக்கடலை சேர்த்த உணவுகளுக்கு முக் கியமான ஆரோக்கிய நன் மைகள் கிடைக்கும்.

100 கிராம் வறுத்த பொட்டுக்கடலையில் 18 கிராம் புரோட்டின், 16 கிராம் சிறந்த நார்ச் சத்துக்கள் காணப்படுகின்றன. பொட்டுக் கடலையானது இலகுவாக ஜீரணமடையக்கூடியது. ஜீரண மண்டலத்தை தூண்டக் கூடியது. செரிமானத்திற்கு உகந்தது. அடுத்தது பொட்டுக் கடலையில் நிறைய தாது உப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றது.

பொட்டாசியம், மகனீசு, பொஸ்பரஸ் ஆகிய தாது உப்புக்கள் நிறைந்து காணப்படுவதால் இருதய நோய்களுக்காண ஆபத்தை குறைக்கிறது.100 கிராம் பொட்டுக் கடலையில் 335 கிலோ கலோரிகள் தான் கிடைக்கும். பெரும்பாலும் நீரிழிவு நோயாளிகளுக்கு இரத்தத்தில் சர்க்கரையின் ஏற்ற இறக்கத்தை சீராக வைத்திருப்பதற்கு உதவுகிறது. எனவே நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்றது இந்த பொட்டுக் கடலை. மாச் சத்தை குறைத்து பொட்டுக் கடலை சேர்ந்த உணவுகளை எடுக்கும்போது இது எடை குறைப்பிற்கும் உதவுகிறது. இந்தியாவில் உள்ள ஆராய்ச்சி நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி இதிலிருக் கும் தாம்பிரம், மகனீசு, பொஸ் பரஸ் என்னும் மூன்று தாது உப்புக்கள் என்புகளின் உறுதித் தன்மைக்கு மிக மிக அவசியம். எனவே



என்புத் தேய்மானம், மூட்டு வலி போன்ற பிரச்சினைகள் இருப்பவர்கள் தாராளமாக பொட்டுக் கடலை சாப்பிடலாம். பொஸ் பரஸ் சத்தானது வறுத்த பொட்டுக் கடலையில் மிக அதிகமாக இருக்கிறது. இந்த பொஸ்பரஸ் ஆனது இரத்த அழுத்த அளவுகளை குறைப்பதில் மிகபங்கு வகிக்கிறது. அடுத்து பொட்டுக் கடலையில் காணப்படும் செலானியம் சத்தானது எமக்கு புற்று நோய் வராமல் பாதுகாக்கிறது. மேலும் முக்கிய மாக பொட்டுக் கடலையானது எமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது.

மலச்சிக்கல் பிரச்சினையால் அவதிப்படுபவர்கள் தாராளமாக பொட்டுக்கடலையை பயன்படுத்தலாம். மலத்தை இலகுவாக்கி வெளியேற்றும் ஆற்றல் உண்டு. பொட்டுக் கடலையில் காணப்படும் வோலேற்று, செம்புச்சத்து, மங்கனீசு சத்துக்களானது மாரடைப்பு ஏற்படும் அபாயத்தை வெகுவாக குறைக்கிறது. வறுத்த பொட்டுக் கடலை யானது புரதத்தின் சிறந்த ஆதாரமாகும்.

உங்கள் எடை இழப்பிற்கு புரத ஆதாரமான உணவை எடுப்பது நல்லது. எனவே எடை இழப்பிற்கு என்று வரும் போது வறுத்த பொட்டுக் கடலையைத் தேர்ந்து எடுங்கள். மேலும் பொட்டுக் கடலையில் காணப்படும் இரும்பு, மகனீசியம், பொஸ்பரஸ், பொட்டாசி ak;kw\/\k;t pw\k pl ;B மற்றும் c உள்ளிட்ட பல்வேறு சத்துக்கள் உடலின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் மேம்படுத்துகின்றது.

பொட்டுக் கடலையில் உள்ள நார்ச்சத்து மற்றும் பொட்டாசியம் உள்ளடக்கமானது ஆரோக்கியமான கொழுப்பின் அளவை ஊக்குவிப் பதன் மூலமும் இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துவதன் மூலமும் இதய ஆரோக்கியத்தை ஆதரிக்க உதவுகிறது.

பொட்டுக் கடலையின் ஃபிலாவனாய்டுகள் மற்றும் பாலிபினால்கள் போன்ற ஆக்சியனேற்றங்கள் உள்ளன. இவை உடலில் உள்ள தீங்கு விளைவிக்கும் பக்றீரியாக்களை நடுநிலையாக்க உதவுகிறது.இதனால் நாட் பட்ட நோய்களின் அபாயத்தை குறைக்க உதவுகிறது.உடல் சீராக இயங்குவதற்கும் . நரம்புகள் ஆரோக்கியமாக செயற்படுவதற்கும் பொட்டுக் கடலை உதவியாக உள்ளது. அதனால் வறுத்த பொட்டுக் கடலை சாப்பிட்டு வந்தால் நரம்பு சம்பந்தமான பாதிப்புகள் குறையவும் வாய்ப்புண்டு. மேலும் இதில் காணப்படும் செலினியம் சத்தானது D.N.A சேதத்தை குறைப்பதற்கும் தனிநபர்களின் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துவதற்கும் புற்று நோய்களின் அபாயத்தை குறைப்பதற்கும் உதவுகிறது. அதுமட்டுமல்ல உடலிலுள்ள உயிரணுக்களு க்கு ஆற்றலை வழங்கவும் உடல் செயற்பாடுகளுக்கும் புரோட்டின் சத்து நிறைந்த பொட்டுக்கடலை ஒரு கைப்பிடி அளவு ஆவது தினமும் சாப்பிட்டு வரலாம். ஆனால் வறுத்த பொட்டுக் கடலையாக சாப்பிட்டு வர வேண்டும். அது மட்டுமல்ல மாதவிடாய் நேரத்தில் பெண்களுக்கு அதிக இரத்தப் போக்கு இருந்தால் ஒரு கைப் பிடி அளவு வறுத்த பொட்டுக் கடலையை சாப்பிட்டு ஒரு டம்ளர் தண்ணீர் குடித்தாலே இரத்தப் போக்கு கட்டுக்குள் வரும்.கர்ப்பிணிகள் சிறிதளவு வறுத்த பொட்டுக் கடலை சாப்பிட்டு வந்தால் குழந்தை ஆரோக்கியமாக வளரும். சருமம் ஆரோக்கியமாக இருக்க உடைத்த பொட்டுக் கடலை பருப்பு அதிகம் சாப்பிட்டு வருபவர்களுக்கு தோல் சம்பந்தமான எந்தவொரு வியாதியும் அவ்வளவு எளிதில் ஏற்படமாட்டாது. ஏனெனில் இதிலிருக்கும் புரதம் மற்றும் இதரச் சத்துக்கள் தோலின் பளபளப்புத் தன்மையை அதிகப்படுத்துகின்றது.

மேலும் தோலில் ஏற்பட்டு இருக்கும் சொறி , சிரங்கு படை பாதிப்புகளை விரைவாக நீக்கும் தன்மையும் இப் பொட்டுக் கடலைக்கு உண்டு. மண் ணிறமான கொண் டல் கடலையை உலர்த்தி தோலை நீக்கி உடைத்து பாதியாக்கி பெறப்படுவதே பொட்டுக் கடலையாகும்

சித்த மருத்து வத்தில் சிறு தானிய உணவுகள் கடலை வகைகள் அதிகமாக பத்திய உணவுகளில் சேர்க்கப்படு கிறது.

# இராசிபலன்

19.01.2026
தை 05, திங்கட்கிழமை.
பிரதமை பின்னிரவு 3.05 மணி வரை

உத்தராடம் பிற்பகல் 12.59 மணி வரை
சுப நேரம் 12.35 - 2.05 மணிவரை
இராகுகாலம் 8.05-9.35மணிவரை

சந்திராஷ்டமம்:
திருவாதிரை, புனர்பூசம்

வளவன்




செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கனவுப் பலிதமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.




வராத உறவினர்கள் உங்கள் வீடுகளிற்கு திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள்.




ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




தொழிலில் நீண்ட நேரம் பணி புரியும் சூழ்நிலை ஏற்படலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.




உடல் நலன் சீராகும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், பொது வாழ்வில் சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், இனிமையான நாள்.




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பாராட்டும் புகழும் கூடும் நாள், உறவினர்கள் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.




தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சோம்பலை விலக்குவது நல்லது, மனச் சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.




சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், அரசு வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.




பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

அளவுக்கு மீறிய சாமர்த்தியம் மட்டாள் தனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 958





அதற்குப் பார்த்திபேந்திர பல்லவன், "தம்பி! இளவரசரின் உள்ளத்தில் ஏதோ கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை விட்டுக் கொடுத்துவிடுவது என்றால் இலேசான காரியமா? அந்த ஆத்திரத்தையெல்லாம் வேட்டையில் காட்டுகிறார் அது வரையில் நல்லதுதான்.

இல்லாவிடில் உன் மீதும் என் மீதும் காட்டுவார். அவராகச் சலிப்புற்றுப் "போதும்" என்று சொல்லட்டும் நாம் தலையிட வேண்டாம்" என்றான்.

இந்தச் சமயத்தில் அந்த வனம் வனாந்தரமெல்லாம் நடுங்கும்படியான உறுமல் சத்தம் ஒன்று கேட்டது. கந்தமாறன் முகத்தில் பீதியின் அறிகுறி காணப்பட்டது. "ஐயோ! காட்டுப் பன்றி! இளவரசரை நிற்கச் சொல்லுங்கள்!" என்றான்.

"காட்டுப்பன்றிக்கு என்ன அவ்வளவு பயம்? புலி, கரடியெல்லாம் இளவரசரிடம் பட்ட பாட்டில் பன்றி எந்த மூலை?"என்றான் பார்த்திபேந்திரன்.

"நீங்கள் தெரியாமல் சொல்கிறீர்கள் இந்தக் காடுகளில் உள்ள பன்றிகள் புலி கரடிகளை சின்னாபின்னமாக்கிவிடும்! யானையை முட்டிக் கீழே தள்ளிவிடும்! குதிரைகள் இலட்சியமே இல்லை, அம்பும் வேலும் காட்டுப்பன்றியின் தோலிலே பட்டுத் தெறித்து விழுமே தவிர அதன் உடலுக்குள்ளே போகாது!... ஐயா! ஐயா! நில்லுங்கள்" என்று கந்தமாறன் கூச்சலிட்டான்.

அதே சமயத்தில் காட்டுப் புதர்களிலே ஒரு சிறிய சுழற்காற்று அடிப்பது போன்ற அல்லோலகல்லோலம் ஏற்பட்டது. மறு நிமிடம் குட்டி யானைகளைப் போன்ற கரிய பெரிய உருவம் வாய்ந்த இரண்டு காட்டுப்பன்றிகள் வெளிப்பட்டன.

அவை ஒரு கண நேரம் நின்று குதிரைகளையும் அவற்றின் மீது வந்தவர்களையும் உற்றுப் பார்த்தன. கந்தமாறன், "ஜாக்கிரதை ஐயா! ஜாக்கிரதை"! என்று கூச்சலிட்டான், பின் தொடர்ந்து வந்த வேட்டைக்காரர்களில் சிலர் இதற்குள் அங்கு வந்து சேர்ந்து விட்டார்கள். அவர்கள் தாரை தப்பட்டைகளைப் பிராணன் போகிற அவசரத்துடன் முழக்கிக் கொண்டு "கா கூ" என்று கூச்சலிட்டார்கள்.

அந்தப் பன்றிகள் என்ன நினைத்துக் கொண்டனவோ என்னமோ தெரியவில்லை. ஒருவேளை அவற்றின் குட்டிகளை நினைத்துக் கொண்டிருக்கலாம். குட்டிகளுக்கு ஆபத்து வராமல் தடுக்க வேண்டுமென்ற உணர்ச்சியினால் தூண்டப்பட்டிருக்கலாம்.

அல்லது தாரை தப்பட்டைகளின் சப்தத்தைக் கேட்டு மிரண்டிருக்கலாம். பன்றிகள் இரண்டும் வெவ்வேறு திசையை நோக்கி பியத்துக் கொண்டு ஓடத் தொடங்கின.

கந்தமாறன் அதைப் பார்த்துவிட்டு, "கோமகனே! அவை போய்த் தொலையட்டும், ஐந்தாறு வேட்டை நாய்கள் இல்லாமல் ஒரு காட்டுப்பன்றியைத் துரத்திக் கொல்ல முடியாது!" என்றான். கரிகாலன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் வில்லை வளைத்து அம்பை விட்டான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அன்பே விருந்து



சாஅதி ஷிராஸ் நகரப் பெரும்புலவர். அவரை எல்லாரும் மதிப்புடனும் பெருமையுடனும் நடத்தினார்கள்.

ஒரு நகரில் பெரிய செல்வர் ஒருவர் வீட்டில் விருந்து நடந்தது. சாஅதியும் அதற்கு அழைக்கப்பட்டு இருந்தார். பலவகையான உணவு வகைகள் பரிமாறப் பட்டன.விருந்து முடிந்தது.

விருந்து கொடுத்தவர் எல்லோர் முன்னிலை யிலும் சாஅதியைப் பார்த்து, "விருந்து [illegible]?" என்று கேட்டார். அதற்குச் சாஅதி, "எங்கள் ஷிராஸ் நகர விருந்துக்கு ஈடாகுமா?" என்று பதில் சொன்னார்.

அதே நகரத்தில் இதை விடப் பெரிய விருந்து ஒன்று நடந்தது. சாஅதியும் அதில் கலந்து கொண்டார். அப்பொழுதும் அவர், "இது எங்கள் ஷிராஸ் நகர விருந்துக்கு ஈடாகாது" என்றார்.

அங்கிருந்த எல்லோரும் எப்படித்தான் ஷிராஸ் நகரத்தில் விருந்து தருகின்றனர் என்பதை அறிய விரும்பிச் சாஅதியுடன் அவர் நகரத்திற்கு புறப்பட்டுச் சென்றனர்.

நண்பர்களுடன் தம் வீட்டை அடைந்த சாஅதி மனைவியைப் பார்த்து, "விருந்துக்கு ஏற்பாடு செய்" என்றார்.

சிறிது நேரத்தில் விருந்தாக ரொட்டியும் நீரும் தான் இலையில் பரிமாறப்பட்டன.

சாஅதியைப் பார்த்து, "இதையா சிறந்த விருந்து என்று சொன்னீர்?" என்று கேட்டார்கள் நண்பர்கள்.

"ஆம். அதில் என்ன ஐயம்" என்ற சா அதி, "எனக்குப் பிடித்த உணவை நான் உண்கிறேன். என் விருந்தினர்க்கும் அதையே கொடுத்து மகிழ்கிறேன்.

ஆனால் உங்கள் ஊரில் மகிழ்ச்சிக்காகவும் ஆடம்பரத்திற்காகவும் விருந்து படைக்கின்றனர். அது விருந்தே ஆகாது. நம் வீட்டிலுள்ள எளிய உணவை உள்ளன்போடு கொடுத்து விருந்தாளியை உபசரிப்பதுதான் உண்மையில் உயர்ந்த விருந்தாகும்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களுக்கு உற்சாகத்தையும் தன்னம்பிக்கையும் அளிக்கும் போது தனது சுயமரியாதை தானாகவே உயரும் ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்து ஆலயப் பிணக்குகளை உடன தீர்த்து வையுங்கள்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என நம் முன்னவர்கள் கூறிவைத்தனர். இவ்வாறு அவர்கள் கூறியதற்குக் காரணம் இறைவனை சதா நினைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கானதாகும்.

இங்கு இறைவனை நினைப்பதன் மூலம் பாவகாரியங்களைச் செய்தலாகாது, ஒருவருக்கு நாம் கெடுதி செய்தால் அதன் ஊழ்வினைப் பயனை நாம் அனுபவித்தே ஆக வேண்டும்.

இல்லாதவர்களுக்கும் வறியவர்களுக்கும் உதவுவதனூடு புண்ணிய கருமங்களைச் செய்து, இறைவனை அடையலாம் என்ற உயரிய எண்ணங்களை நாம் பின்பற்றுவதற்கு இது கட்டாயம் தேவையாகிறது.

இருந்தும் சமகாலத்தில் இறை வழிபாடுகளும் திருவிழாக்களும் ஆடம்பரமும் அலங்காரமுமாக மாறிவிட்டன.

அதிலும் மிகப்பெரும் வேதனை இந்து ஆலயங்களில் நிலவக்கூடிய பிணக்குகளாகும்.

ஆம், ஆலய நிர்வாகங்களுக்கிடையே இருக்கக்கூடிய பிணக்குகள் காரணமாக, நீதிமன்றங்களில் ஆலயங்களை நிறுத்துகின்ற மிக மோசமான நிலைமை காணப்படுகின்றது.

அதிலும் அடியவர்கள் ஆலயத்துக்கு அன்பளிப்பாக வழங்கிய நிதி, நீதிமன்ற வழக்குகளுக்குச் செலவிடப்படுவதென்பது எத்துணை மோசமான காரியம் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் ஆலயங்களை நீதிமன்றங்களில் நிறுத்தும்போது, ஆலயக்கட்டுமானப் பணிகள் – கும்பாபிஷேகங்கள் – மகோற்சவங்கள் தடைப்படுகின்ற அபத்தங்களும் நடந்தாகின்றன.

சிலவேளைகளில் ஆலய பூசை வழிபாடுகள் கூட, நின்று போகின்ற துர்ப்பாக்கியங்களும் ஏற்படுகின்றன.

உண்மையில் இந்து ஆலயங்களில் எழக்கூடிய பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு இந்து சமய தலைமை அமைப்புகளோ அன்றி பஞ்சாயத்து சபைகளோ, ஆணைக்குழுக்களோ இல்லாத காரணத்தால், நீதிமன்றங்களை நாடுவதைத் தவிர வேறு வழியில்லாமல் போகிறது.

இங்குதான் நீதிமன்றங்களை நாடும் போது, குறித்த ஆலயப் பிணக்குக்கான தீர்ப்புக் கிடைப்பதற்கு பத்து வருடங்கள் கூட ஆகலாம். இஃது தெய்வக்குற்றமாகிவிடும்.

ஆம், கடவுள் மீது நம்பிக்கையற்று நீயா! நானா! என்ற போட்டியில் ஆலயங்கள் மீது, நீதிமன்றங்களில் வழக்குத் தொடுக்கின்றவர்களால் இந்து ஆலயங்கள் கிரியைகள் இன்றி இருப்பதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏனெனில் அத்தகைய நிலைமை ஊருக்கும் – நாட்டுக்கும் – மக்களுக்கும் பாதகமாக அமையுமென்பதால் நீதிமன்றங்களுக்கு அப்பால், அரச அங்கீகாரம் பெற்ற இந்து அமைப்புகள் ஆலயப் பிணக்குகளைக் கையாள வேண்டும்.

அதற்கான ஏற்பாடுகள் காலதாமதமாகும் எனில், ஆலய வழக்குகள் தொடர்பில் நீதிமன்றங்கள் ஓரிரு மாதங்களுக்குள் தீர்ப்புகளை வழங்கி ஆலயங்களை விடுவிக்க வேண்டும்.

இதைச் செய்வதன் மூலம் ஆலயப் பிணக்குகள் வழக்குகளாக மாறுவதைத் தடுக்க முடியும் என்பது நம் தாழ்மையான கருத்து.

# கல்விச்சீர்திருத்தச் சிக்கலுக்கு வெகுவிரைவில் தீர்வு காணப்படும்

## மகாநாயக்கர்களிடம் அமைச்சர் உறுதி

*(கண்டி)*

புதிய கல்விச் சீர்திருத்தங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை விரைவில் தீர்த்து மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை(18) கண்டிக்கு விஜயம் செய்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்ற போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அமைச்சர் கடந்த ஏப்பிரலில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்த போது இந்தியாவின் பௌத்த வழிபாட்டு சின்னங்களை இலங்கை மக்களும் வழிபட வேண்டும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய அவை எதிர்வரும் பெப்ரவரி நான்காம் திகதி நாட்டுக்குக் கொண்டு வரப்படவுள்ளன. இது தொடர்பில் மகாநாயக்க தேரர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

கல்விச் சீர்திருத்தங்கள் நீண்ட காலமாக முன்னெடுக்கப்படாமலிருந்தன. எனவேதான் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த எமது அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும் தரம் 6 பாடநூலில் ஏற்பட்ட ஒரு சிறு தவறால் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்தத் தவறுகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அது தவிர, எதிர்க்கட்சிகள் கூறுவதைப் போன்று வேறு எந்தவொரு தவறான விடயங்களும் குறித்த பாடநூலில் உள்ளடக்கப்படவில்லை. இதனை நன்கு அறிந்த தரப்பினரால் இந்தச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அது மாத்திரமின்றி ஜனாதிபதியிடம் கடிதம் மூலமும் இதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. தவறுகள் காணப்படுமாயின் அவற்றை திருத்திக்கொண்டு கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் தயாராகவுள்ளோம் என்றார். *(ந-7)*

### கச்சேரி – நல்லூர் வீதியில்

## வாகன விபத்து ஒருவர் படுகாயம்

*(கச்சேரி)*

யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கப் ரக வாகனம் ஒன்றும் முச்சக்கரவண்டி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். *(ந-7,104)*

## போதைப்பொருள் தொடர்பில் ஒரே நாளில் 882 பேர் கைது

முழு நாடுமே ஒன்றாக தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட நாளாந்த சோதனை நடவடிக்கையின் அடிப்படையில் போதைப் பொருள் தொடர்பில் 882 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை சட்ட விரோத சொத்துக்கள் தொடர்பில் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் 09 சந்தேக நபர்களுக்குத் தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதுடன் ஒருவர் புனர்வாழ்விற்காக அனுப்பப்பட்டுள்ளார்.

மேலும் இந்த நடவடிக்கையின் போது 400 கிராம் ஹெரோயின், 1 கிலோகிராம் 11 கிராம் ஐஸ் மற்றும் 500 கிராம் கொக்கைன் ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. *(ந-7)*

### பொற்பதி - மணல்காடு

## வீதியைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

*(பொற்பதி)*

வடமராட்சி கிழக்கு பொற்பதி - மணல்காடு இணைப்பு வீதியைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்துக் கருத்துரைத்த அப்பகுதி மக்கள்,

மணல்காடு கிராமத்திற்கும் பொற்பதிக் கிராமத்திற்கும் இடையேயான சுமார் 500 மீற்றர் வீதி பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாமையால் பொற்பதி மற்றும் மணல்காடு கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொற்பதி மற்றும் மணல்காடு கிராமங்கள் மீன்பிடிப்பதை பிரதான தொழிலாகக் கொண்டுள்ளன. இங்கு 500 மீற்றர் வீதி சீரின்மை காரணமாக சுமார் 8 km தூரம் சுற்றிப் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் பொற்பதியிலிருந்து மாணவர்கள் பருத்தித்துறைக்கு சுமார் 12 km தூரம் செல்ல வேண்டியுள்ளது. இதனால் அந்த மாணவர்களும் பல இன்னல்களை எதிர்கொள்கின்றனர். ஆகையால் உரியவர்கள் இது குறித்துக் கவனமெடுத்து குறித்த வீதியைச் சீர் செய்து தர வேண்டும் எனக் கேட்டுள்ளனர். *(ந-7,104)*

## தொடரும் துப்பாக்கிச்சூடுகள் குருநாகலிலும் ஒருவர் பலி

*(குருநாகல்)*

குருநாகல் - அலவ்வ - வில்கமுவ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வில்கமுவ பகுதியில் நபர் ஒருவர் சடலமாகக் கிடப்பதாக வழங்கப்பட்ட தகவலையடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சடலத்தை மீட்டுள்ளனர்.

குறித்த சடலம் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் காணப்படுவதால் இது ஒரு திட்டமிட்ட கொலையாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

வீரே மதியகனே நாரம்மல பகுதியைச் சேர்ந்த கவிந்து நிமேஷா என்ற 28 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக குருநாகல் மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில்,

இச்சம்பவம் தொடர்பாக தடயவியல் நிபுணர்களின் உதவியுடன், அலவ்வ பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. *(ந-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழப்பநிலையில் மாகாண சபைத் தேர்தல்கள் ஒரு பார்வை

05

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.



| அட்டவணை B | | | |
|---|---|---|---|
| பிரதேச செயலகம் | முஸ்லீம் | பிரதேச செயலகம் | முஸ்லீம் |
| பதவிய | 3 | நாச்சதுவ | 3339 |
| கெபித்திகொல்லாவை | 2086 | நொச்சியாகம | 1982 |
| மதவாச்சி | 2785 | ராஜாங்கணை | 2 |
| மஹவிலச்சி | 13 | தம்புத்தேகம | 9 |
| மத்திய நுவரகம் பலாத்த | 5294 | தலாவ | 629 |
| ரம்பாவ | 5664 | திரப்பணை | 1649 |
| கஹட்டகஸ்திகிலிய | 8169 | கெக்கிராவை | 10904 |
| ஹொரவ்பொத்தானை | 9802 | பலுகஸ்வெவ | 25 |
| கலென்பிந்துனுவெவ | 1382 | இப்பலோகம | 5360 |
| நுவரகம் பலாத்த கிழக்கு | 2953 | மிஹிந்தலை | 1613 |

### மாகாணமட்டத்தில் சமூகங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய ஆசனங்களும் ஒதுக்கப்பட்ட ஆசனங்களும்

| அட்டவணை C | 2012ம் ஆண்டின் சனத்தொகை விகிதாசாரத்தின்படி சமூகங்களுக்கு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கப்பட வேண்டிய ஆசனங்கள் | | | | ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் | | | |
| மாகாணம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் | மொத்தம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் | மொத்தம் |
| மேல் | 46 | 2 | 3 | 51 | 46 | 2 | 3 | 51 |
| மத்திய | 19 | 8 | 2 | 29 | 23 | 5 | 1 | 29 |
| தென் | 27 | - | - | 27 | 27 | - | - | 27 |
| வட | - | 19 | - | 19 | - | 19 | - | 19 |
| கீழ் | 4 | 7 | 7 | 18 | 4 | 7 | 7 | 18 |
| வடமேல் | 22 | - | 3 | 25 | 23 | - | 2 | 25 |
| வட மத்திய | 15 | - | 1 | 16 | 16 | - | - | 16 |
| ஊவா | 14 | 2 | - | 16 | 14 | 2 | - | 16 |
| சப்பிரகமுவ | 19 | 2 | - | 21 | 21 | - | - | 21 |
| மொத்தம் | 166 | 40 | 16 | 222 | 174 | 35 | 13 | 222 |

மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு, போனஸ் ஆசனங்களை தவிர்த்து மொத்தமாக இருக்கும் 437 உறுப்பினர்களில் 50% மான உறுப்பினர்களுக்காக 222 தேர்தல் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்தது.

இனக் குழுமங்களின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை: சிங்களவர்-166, தமிழர் -40, முஸ்லீம் - 16 (அட்டவணை-C ஐப் பார்க்க). இனக் குழுமங்களின் அடிப்படையில் புதிதாக உருவாக்கப்பட்ட தேர்தல் தொகுதிகள்/ உறுப்பினர்கள் எண்ணிக்கை: சிங்களவர்-174, தமிழர் -35, முஸ்லீம் - 13 (அட்டவணை-C ஐப் பார்க்க). அட்டவணை-D ஆனது இவ் விரு அட்டவணைகளுக்கும் இடையே உள்ள எண்ணிக்கை வித்தியாசத்தை (அதிகம்/குறைவு) தருகிறது.

| அட்டவணை-D<br>இன அடிப்படையில் (அதிகம்/குறைவு)<br>மாகாணம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மேல் | 0 | 0 | 0 | 0 |
| மத்திய | 4 | -3 | -1 | 0 |
| தென் | 0 | 0 | 0 | 0 |
| வட | 0 | 0 | 0 | 0 |
| கீழ் | 0 | 0 | 0 | 0 |
| வடமேல் | 1 | 0 | -1 | 0 |
| வட மத்திய | 1 | 0 | -1 | 0 |
| ஊவா | 0 | 0 | 0 | 0 |
| சப்பிரகமுவ | 2 | -2 | 0 | 0 |
| மொத்தம் | 8 | -5 | -3 | 0 |

மேல் மாகாணம் தவிர்ந்த மற்றைய எல்லா மாகாணங்களிலும் சிறுபான்மைச் சமூகங்களுக்கு அவர்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப தொகுதி ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை என்பது புலனாகின்றது. இக் குறைபாடு விகிதாசார முறைக்கு முன்னர் இருந்த தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயங்களிலும் காணப்பட்டுள்ளது. சிறுபான்மைச் சமூகம் நிர்வாக மாவட்டங்களில் சிதறி வாழ்வதே இதற்கு காரணம் ஆகும்.

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்சனைக்கு தீர்வாக போனஸ் ஆசனங்களை சிறுபான்மைச் சமூகத்தினரிடையே எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படவேண்டுமென்றும், சிறந்த தீர்வாக போனஸ் ஆசனங்களை 5 ஆக அதிகரித்து அவை எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகத்தினரிடையே எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்றும் இரு முறைகளை 2018 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பாராளுமன்றத்தில் நடந்த கட்சிக் கூட்டத்தில் எல்லை நிர்ணயக்குழு சமர்ப்பித் திருந்தது. அது கருத்தில் கொள்ளப் படவில்லை.

### போனஸ் ஆசனங்களின் தொகையை ஐந்தாக அதிகரித்தல்

புறந்துருத்தி ஆசனங்களைக் (overhang) கொண்ட கலப்புத் தேர்தல் முறை ஸ்திரமற்ற மாகாண அரசை உருவாக்கவே வழிவகுக்கும். போனஸ் ஆசனங்களின் எண்ணிக்கையை இரண்டிலிருந்து ஐந்தாக அதிகரிப்பதன் மூலம் ஸ்திரமான மாகாண அரசை உருவாக்க முடியும். இதனை கீழே குறிப்பிட்ட அடிப்படை வரம்புகளின் கீழ் செய்வதன் மூலம் இன உறுப்பினர்களின் (தமிழர் மற்றும் முஸ்லீம்) எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். அடிப்படை வரம்பு (Criteria): மாகாண அரசை உருவாக்கும் கட்சிக்கு 5 போனஸ் ஆசனங்கள் கொடுக்கப்பட வேண்டும். அவற்றுள் 2 அம் மாகாணத்திலுள்ள முதலாவது பெரும்பான்மை இனத் திற்கும், 2 இரண்டாவது பெரும்பான்மை இனத்திற்கும், 1 சிறுபான்மை இனத்திற்கும், வழங்கப்பட வேண்டும். கடைசியாக நடந்த சனத் தொகை கணிப்பீட்டின் படி பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை இனம் தெரிவு செய்யப்படவேண்டும். இவ் அடிப்படை வரம்பு (Criteria) சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

ஒன்பது மாகாணங்களுக்கிடையே இவ் ஐந்து ஆசனங்களும் பகிரப்படும் முறையை அட்டவணை-E காட்டுகிறது. இவ்வாறு செய்யப்பட்டால் நாடளாவிய ரீதியில் ஒதுக்கீடுகள் எவ்வாறு இருக்கும் என்பதை அட்டவணை-F காட்டுகிறது.

| அட்டவணை-E<br>போனஸ் ஆசனங்கள் | | | | |
|---|---|---|---|---|
| பெரும்பான்மை | | 2 | | |
| 2வது பெரும்பான்மை | | 2 | | |
| சிறுபான்மை | | 1 | | |
| மொத்தம் | | 5 | | |
| மாகாணம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் | மொத்தம் |
| மேல் | 2 | 1 | 2 | 5 |
| மத்திய | 2 | 2 | 1 | 5 |
| தென் | 2 | 1 | 2 | 5 |
| வட | 1 | 2 | 2 | 5 |
| கீழ் | 1 | 2 | 2 | 5 |
| வடமேல் | 2 | 1 | 2 | 5 |
| வட மத்திய | 2 | 1 | 2 | 5 |
| ஊவா | 2 | 2 | 1 | 5 |
| சப்பிரகமுவ | 2 | 2 | 1 | 5 |
| மொத்தம் | 16 | 14 | 15 | 45 |

| அட்டவணை-F<br>முன்மொழியப்பட்ட தொகுதிகள்-50%<br>போனஸ் ஆசனங்களைச்சேர்த்து<br>முன்மொழியப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|
| மாகாணம் | சிங்களவர் | தமிழர் | முஸ்லீம் | மொத்தம் |
| மேல் | 48 | 3 | 5 | 56 |
| மத்திய | 25 | 7 | 2 | 34 |
| தென் | 29 | 1 | 2 | 32 |
| வட | 1 | 21 | 2 | 24 |
| கீழ் | 5 | 9 | 9 | 23 |
| வடமேல் | 25 | 1 | 4 | 30 |
| வட மத்திய | 18 | 1 | 2 | 21 |
| ஊவா | 16 | 4 | 1 | 21 |
| சப்பிரகமுவ | 23 | 2 | 1 | 26 |
| மொத்தம் | 190 | 49 | 28 | 267 |
| % | 72.2 | 18.3 | 10.5 | |
| சனத் தொகை % | 74.9 | 15.3 | 9.3 | |

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகையிரத...

இடைநிறுத்தப்படவுள்ளது.

இது குறித்து பத்திரமுல்லையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் புகையிரதத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது,

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட வடக்கு புகையிரதப் பாதையின் புனரமைப்புக் பணிகள் நாளை 19 (இன்று) முதல் முன்னெடுக்கப்படவுள்ளன. அதன் பிரகாரம் இன்று 19ஆம் திகதி முதல் மஹவ தொடக்கம் அநுராதபுரம் வரையிலான புகையிரதப் பாதை மூடப்படும்.

எதிர்வரும் ஜனவரி 26ஆம் திகதி முதல் மஹவ முதல் ஓமந்தை வரையிலான பகுதி முழுமையாக மூடப்படும்.

மதவாச்சி முதல் மன்னார் வரையான புகையிரப் பாதையின் புனரமைப்புப் பணிகளும் இதே காலப் பகுதியில் முன்னெடுக்கப்படும்.

பயணிகளின் நலன் கருதி யாழ். ராணி ரயில் சேவையானது தொடர்ந்து முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இன்று 19ஆம் திகதி முதல் அநுராதபுரம் - காங்கேசன்துறை வரையிலும் ஜனவரி 27ஆம் திகதி முதல் ஓமந்தை தொடக்கம் - காங்கேசன்துறை வரையிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயக்கப்படும் எனத் தெரிவித்தார். (ந-7)

## வல்லைப்...

யாழ்ப்பாணத்திலிருந்து மந்திகை நோக்கிப் பயணித்த கார் ஒன்று அச்சுவேலி வல்லைப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி சதுப்பு நிலத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை (18) மாலை இவ்விபத்து சம்பவித்துள்ளது.

இதில் திருநெல்வேலி ஆடிய பாதம் வீதியைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் மகள் ஆகிய மூவரே படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

காயமடைந்த மூவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மூவருக்கும் தலையில் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் விபத்துக்குள்ளான மகளின் கால்கள் முறிவடைந்துள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,60)

## ஸ்ரீ லங்கா...

வைத்துள்ளமை வடக்கு மக்களை பெரிதும் அச்சமூட்டியுள்ளது.

ஸ்ரீ லங்கா ரெலிக்கொம்மின் பெயரைப் பயன்படுத்தி குறித்த மோசடியானது முன்னெடுக்கப்பட்டுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கையில்,

தாம் ஸ்ரீ லங்கா ரெலிக்கொம்மின் தலைமையகத்தில் இருந்து கதைப்பதாகவும் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளும் மோசடியாளர்கள், உங்களுக்கு ஸ்ரார் பொயின்ட்ஸ் ஆக ஒரு இலட்சத்துக்கும் அதிக தொகை கிடைத்துள்ளதாகத் தெரிவித்து நூதன முறையில் மோசடியில் ஈடுபடுகின்றனர்.

இதன்போது பாவனையாளரின் கணக்கு இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன கோரப்படுகின்றன. மேலும் பாவனையாளர் இணையவழி வங்கி முறைமையைப் பயன்படுத்துகின்றாரா? என உறுதிப்படுத்தியதன் பின்னரே மோசடிகள் அரங்கேறுவதாகவும் குறிப்பிட்டனர்.

இந்த மோசடியில் பணத்தை இழந்தவர்களால் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அரச சேவையில் ஈடுபடுபவர்கள், கல்வியாளர்கள் கூட இம்மோசடிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இவ்வாறான அழைப்புக்களில் எதுவித உண்மைத் தன்மையும் இல்லை எனவும் மோசடிகள் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் அமைந்துள்ள கணினிக் குற்றவியல் பிரிவுக்கோ அல்லது தத்தமது பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கோ உடன் தகவல் தருமாறும் எக்காரணம் கொண்டும் அவர்கள் கோரும் விபரங்களை வழங்க வேண்டாம் எனவும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ந-7)

## ஆலயத்தில்...

தின் தலைவர் ஜமுனி கமந்த துஷாரா இந்த முறைப்பாட்டினைப் பதிவு செய்துள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துரைத்த அவர்,

சட்டமானது அனைவருக்கும் சமமானதாக இருக்கவேண்டும். கரையோரத்தில் புத்தர் சிலை வைத்ததாகக் குறிப்பிட்டு 4 பௌத்த மதகுருக்கள் அடங்கலாக 9 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் நிலையில்,

திருகோணமலை பிரட்றிக் கோட்டை வாயிலில் பிள்ளையார் கோவில் கட்டுமானப் பணிகள் இடம்பெறுவது சட்டவிரோதமானது. இது குறித்து பொலிஸார் பாராமுகமாக உள்ளனர்.

இது தொடர்பில் நேற்று திருகோணமலை பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளோம்.

இன்று தொல்லியல் திணைக்களம் மற்றும் கரையோர வளங்கள் பாதுகாப்புத் திணைக்களத்திலும் முறைப்பாடு செய்யவுள்ளோம் எனத் தெரிவித்தார். (ந-7)

## வாக...

பெறப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், வாகன ஓட்டுநர் உரிமத்துக்கான குறைபாட்டுப் புள்ளி அடுத்த ஆண்டு ஜூலை மாதம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

வீதிப்போக்குவரத்து ஒழுங்கை மேம்படுத்தவும், போக்குவரத்து தொடர்பான குற்றங்களை குறைக்கவும் மேற்கொள்ளப்படும் விரிவான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இம்முறைமை அமுல்படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## முச்சக்கர...

இதில் சண்டிலிப்பாய் மத்தியைச் சேர்ந்த செல்லத்துரை மனோன்மணி (வயது-80) என்ற மூதாட்டியே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் வீதியால் சென்ற வேளை முச்சக்கரவண்டி அவர்மீது மோதியதில் அவர் படுகாயமடைந்த நிலையில், சிகிச்சைக்காக சங்கானை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார்.

அவரது சடலம் தற்போது சங்கானை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் குறித்து விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,104)


மஹஜன சம்பத — திகதி 2026.01.18 — சீட்டிழுப்பு இலக்கம் 6078 — C 4 5 1 3 2 6
அத சம்பத — C 1 3 2 6 — சீட்டிழுப்பு இலக்கம் 0653
சுப தவசக — திகதி 2026.01.18 — 194 — கும்பம் 09 31 66 — 2144
தன நிதானய — திகதி 2026.01.18 — சீட்டிழுப்பு இலக்கம் 2108 — L 01 06 33 36 L
மெகா பவர் — திகதி 18/01/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2426 — A 21 12 20 48 74
ஜய — திகதி 2026.01.18 — சீட்டிழுப்பு இலக்கம் 0346 — P 7 5 7 7
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4320 — சீட்டிழுப்பு திகதி 18.01.2026 — X 01 29 38 45 X
ஹந்தஹன — சீட்டிழுப்பு திகதி 2026.01.18 — சீட்டிழுப்பு இலக்கம் 1387 — துலாம் 02 17 33 59 துலாம்
சுபிரி தன சம்பத — 18.01.2026 — வெற்றி வாரம் 0786 — F 5 0 6 2 6 2 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,174,929.60
Super Ball — சீட்டிழுப்பு வாரம் 3052 — 2026.01.18 ஞாயிற்றுக்கிழமை — 24 36 44 61 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 90,672,418.40
சனிதா — 18.01.2026 — வெற்றி வாரம் 5213 — 01 02 47 69 Q — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,238,316.80
சசிரி — 882 — 18.01.2026 ஞாயிற்றுக்கிழமை — 02 44 47 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4764 — 18.01.2026 ஞாயிற்றுக்கிழமை — 02 11 38 58 மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,285,619.60
கப்ருக — 2228 — 18.01.2026 — I 26 15 41 44 68 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.621,530,632.60
அத கோடீபதி — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2878 — 2026.01.18 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79,521,558.40 — 21 27 30 43 J


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணப்பெண் தேவை

01. வண்ணார்பண்ணை, இந்து, 1988, திருவோணம், Network Engineering, Deputy manager, vegetarian மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53218)
02. சாவகச்சேரி, இந்து, 1989, அனுஷம், BSc IT, Software Engineer, singapore, vegetarian மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (38366)
03. சாவகச்சேரி, இந்து, 1990, விசாகம், Doctor, Bachelor of dental surgery, Dentist, vegetarian மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (42706)
04. புலோலி, இந்து, 1987, பூராடம், MSc, site Engineer, UK, Vegetarian மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (50016)
05. யாழ், இந்து, 1991, கார்த்திகை, Masters of accounting and finance, Accountant, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (43419)
06. கோப்பாய், இந்து, 1990, உத்தரம், civil Engineering, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (32598)
07. கோப்பாய், இந்து, 1992, உத்தரம், Phd in computer science, Research Assistant, USA மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (42604)
08. காரைநகர், இந்து, 1993, பூசம், software engineering, Engineer, USA citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (31050)
09. உரும்பிராய், இந்து, 1989, பூசம், Masters of professional Accounting, financial officer, canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (45173)
10. யாழ், இந்து, 1988, புனர்பூசம், B.Eng software, software consultant, canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30887)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு. (1944)

**S.Sharma J.P**
www.thaalee.com
077 539 3728
077 992 1494

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4844)

**076 825 7716** (ஆகாஸ்)

---

## மலிவு விலையில்

**பாடசாலை மாணவர்களுக்கான காலுறைகள்**




மொத்த கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு (C-4842)

**076 315 6470**

**ஸ்ரீமுருகன்** No,303, K.K.S Road, Jaffna.

---

## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால்,
குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | வாதம் | வயிற்றுப்புண் |
Gastritis | அல்சர் மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான
மூலிகை, Acu சிகிச்சைகள் | சிக்கின் குனியாவால்
ஏற்படும் மூட்டு, தசை, பாத வலிகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : **0777 301 669**
(6601)

---

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதியில் இயங்கும் Food City க்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை. (6600)

Jenusha Food City, பஸ்ரியன் சந்தி.
**077 008 3491**

---

## மணமக்கள் தேவை

யாழ். கத்தோலிக்க 1989 இல் பிறந்த மணமகளுக்கு மணமகனும் 1986 இல் பிறந்த யாழ். கத்தோலிக்க மணமகனுக்கு மணமகளும் தேவை. (6599)

தொடர்பு:
**077 967 2613**

---

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378 | 076 097 3127**

---

## மணல் விற்பனை/ பொமிட் போட்டுத் தரப்படும்

**கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு மணல் விற்பனைக்கு உண்டு. யாழ். மாவட்டத்திற்கு 65,000 இருந்து.. மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டுத் தரப்படும்.** (1955)

**076 324 9977**

---

## 22 உடன் விற்பனைக்கு 22

01. யாழ். பிறவுண் வீதியில் 1 பரப்பு, 1 ½ பரப்பு, 2 பரப்பு, 2 ½ பரப்பு காணித் துண்டுகளும்
02. யாழ். கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 5 பரப்பு காணியும்
03. யாழ். நல்லூர் குறொஸ் வீதியில் குறொஸ் வீதி முகப்புடன் 4 பரப்பில் அமைந்த சுற்று மதிலுடனான காணியும்
04. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக 11 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 3 மாடிக் கடையும்
05. யாழ். ஸ்ரான்லி வீதியில் மக்கள் வங்கிக்கு அண்மையில் 4 கடைகளும்
06. யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்புக் காணியும்
07. யாழ். ஆனைக்கோட்டை உயரப்புலம் வீதியில் 7 பரப்பில் அமைந்த காணியும் வீடும்
08. யாழ். மனோகரா தியேட்டருக்கு அண்மையில் 2 ½ பரப்பில் அமைந்த வடக்கு வாசல் வீடும்
09. யாழ். 3 ஆம் குறுக்குத் தெருவில் 3 பரப்பில் அமைந்த காணியும் வீடும்
10. யாழ். சிக்னல் சந்திக்கு அண்மையில் 40 பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

**கனகசபை தர்மகுலசிங்கம்**
தொடர்பு : **077 723 2535**
No.378, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C-4841)

---

## வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**
# 01 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி. யாழ்ப்பாணம்.
021 222 6113, 076 443 1576

**அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**
# 10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536, 077 657 9349



(C-4840)

- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்.
- 25 வருடங்களாக மக்கள் நம்பிக்கையை வென்ற நிறுவனம்.
- அனுப்பப்படும் பொதிகளுக்கு காப்புறுதி செய்ய வேண்டியதில்லை. முழுப் பெறுமதியையும் எமது நிறுவனம் பொறுப்பேற்கும்.
- உங்கள் வீடுகளுக்கு வந்து ஏற்றுக் கொள்ளப்படும் சேவைக்கு மேலதிக கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

கிளைகள்: # 01 தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | # 01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. | CTB பஸ் டிப்போ எதிரில் பருத்தித்துறை. | கொமர்ஷல் வங்கி அருகில் கிளிநொச்சி.

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org